அன்பளிப்பு
1/5/91

வீரமாமுனிவர்

இயற்றிய

ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம்

மூலமும் உரையும்

எழுத்ததிகாரம்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

பதிப்பாசிரியர்:

மகாவித்துவான் F. X. C. நடராசா.

557 pam

மட்டக்களப்பு.

வைகாசி 1991.

சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

முன்னுரை

வீரமாமுனிவர் இந்தியத் தென்னகத்திற்கு வந்தது தெரியாது. பலரும் பலவிதமாக எழுதுகிறார்கள். அவர் எழுதிய ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம் மூலமும் உரையும் கி. பி. 1730 என்பது தெரியும். எல்லாரும் எல்லா வகையானும் இது சரி என்று எழுதுகிறார்கள்.

வீரமாமுனிவர் கையாண்ட மொழிப் பிரயோகம் கடுமையானது. சூத்திரங்கள் சந்திகள் பிரித்துப் பொருள் காண்பது இலகு அன்று. மூலம் இவ் வண்ணமிருக்கிறது. உரையோ கடுமையானது. புணர்ச்சி நீக்கிப் பொருளைத் தெரிந்துகொள்ளல் வேண்டும். புணர்ச்சி - புணர்பு என்கிறார் முனிவர். நூல் முழுவதற்கும் உரை எழுதியிருக்கிறார். இயன்றமட்டும் பதத்தோடு பதஞ் சேர்ப்பதில் முனைந்திருக்கிறார். பதிப்பிலும் பிழைகள் மலிந்திருக்கும்.

வேதகிரி முதலியார் கி. பி. 1838 - சரியான - விளம்பி ஆண்டிற் புதுவையிற் பதிப்பித்தார். இது முதலாம் பதிப்பு. என்னிடம் உண்டு. பதிப்பகம் குறிப்பிடவில்லை.

வேதகிரி முதலியார்பற்றி இருவர் வேற்றுமையாக எழுதியுள்ளனர். சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர். எழுதியது - தமிழ்ப் புலவர் சரித்திரம், 1916. மற்றையவர் உ. வே. சா. எனப்படும் டாக்டர் உ. வே. சாமிநாதையர். எழுதியது - மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம், 1933. முரண்பாடான செய்தி: முதலாவதில் பக்கம் - 179-187. இரண்டாவதில் பக்கம் - 117 பார்க்குக.

அமிர்தநாதர் கி. பி. 1864 - நாகையிலே பதிப்பித்தார் என்று டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் கூறுகிறார். என்னிடமில்லை. இஃது இரண்டாம் பதிப்பு.

கனம் ஜி. மெக்கன்ஜி காபன் அய்யர் கி. பி. 1891 ஆண்டுக்குச் சரியான கர வருடம் சென்னையிற் பதிப்பித்தார். இஃதினை இரண்டாம் பதிப்பு என்கிறார் பதிப்பாசிரியர். இது மூன்றாம் பதிப்பெனக் கருதுகிறோம். என்னிடமிருக்கிறது.

தொன்னூல் விளக்கம் திறனாய்வு, மூலம், விளக்கம் என்ற பான்மையில் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் 1978 - சென்னையிற் பதிப்பித்தார். ச. வே. சு. அன்பளிப்பாகத் தந்தார். நான்காம் பதிப்பு.

சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை தொன்னூல் விளக்கத்தை 1984 - பதிப்பித்தார். காபன் அய்யர் பதிப்புத்தான். பிழையும் தவறுமுடைத்து. சூத்திரமும், பக்கமும், உரையும் ஒத்துப்போகின்றன.

தொன்னூல் விளக்கம் இதுவரை ஐந்து பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. முதற் பதிப்பு - வேதகிரி முதலியார் - தெளிவாக இருக்கின்றது. ஆனாலும் வாசித்தல் கயிட்டம். சூத்திரங்கள் எண்ணிடப்பட்டனவாயினும் - 370 சூத்திரங்கள் பொதுப்பாயிரம் நீங்கலாக – சொல்வதெழுதுதல்போல் அச்சிடப்பட்டுண்டு. ஆங்கிலமொழியின்று.

மூன்றாம் பதிப்பும் – காபன் அய்யர் - 1891 பதிப்பு – ஐந்தாம் பதிப்பு - கழகப் பதிப்பு – 1984 – ஒரே மாதிரி. ஆங்கிலத்தில் தலைப்புகள் இடம்பெற்றுள்ளன.

ஆறாவது பதிப்பு இலங்கையிலுள்ள மட்டக்களப்பில் வெளிவந்திருக்கின்றது - எழுத்ததிகாரம். இரண்டாம் பதிப்பு நீங்கலாக. வழுக்கள் நீக்கியும் அடிக்குறிப்பெழுதியும் பதிப்பித்திருக்கின்றேன்.

F. X. C. நடராசா

127, மத்திய வீதி,
மட்டக்களப்பு.
1-5-1991.

கடவுள் துணை.

இஃது

வீரமாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

ஐந்திலக்கணத்

தொன்னூல் விளக்கம்

மூலமும் - உரையும்

பொதுப்பாயிரம்

நீர்மலிகடறவழ் நிலன்முதன்மற்றருஞ்
சீர்மலியுலகெலாஞ் செய்தளித்தழிப்ப
வல்லவனுய்முதன் மட்டறுப்பெதி
ரில்லவனுயய ரிறையோனொருவனைப்
பன்மையொழியப் பணிந்தேயிராவிருட்
டன்மையொழியத் தரணியிற்றோன்றிய
வாதவனிகரரு ளகத்தறவன்ற
னேதியமறைநூ லோதினனாகி
யம்மெய்ப்பொருளோன் றனைவருமுணரச்
செய்மெய்ப்பொருளத் திருமறைவழங்க
வமைத்துளத்தெழுந்த வாசையுட்டூண்டிச்
சமைத்துளயாவருந் தாங்கத்தருகென
வேவியதாகவிப் பணியேற்றிநூன்
மேவியவைம்பொருள் விளக்கலுணர்ந்து
விரிவிலாத்தொன்னூல் விளக்கமெனுய்பெயர்த்
தரியவாசிரிய ரருந்தமிழ்ச்சொல்லிற்
பிறநூன்முடிந்தது பெயர்த்துடன்படுத்தியும்
புறநூன்முடிந்தது பொருத்தியுந்தானொரு
வழிநூன் முடித்தனன் வாய்ப்பருமெய்ம்மறை
மொழி நூலத்தராய் முதிர்சிறப்பிணையி
லிரோமைநாட்டினின் றெய்தியமுனிவருள்
விரோதமொழிதயைமேவக
நேரமாதவத்தின் வீரமாமுனியே.

(என்பது). இவற்றுணூலின்பெயரு மாக்கியோன்பெயரு மாக்கியகாரணவகையுந் தரும்பொருளளவுங் கொள்வோர்பயனுமென் றிவ்வைந்துறுப்புள விச்சூத்திரம் பொதுப் பாயிரமாக வம்மாமுனி மாணுக்கருணூலி னெளியனெனு மன்பிலுயர்ந்தோ னுரைத்த வாறு காண்க.

என்னையோவெனில். —

நூலே நுவல்வோ னுவலுந்திறனே
கொள்வோன்கோடற் கூற்றுமைந்து
மெல்லாநூற்குமிவை பொதுப்பாயிரம். நன்: சூத்: 3.

(என்பது) நன்னூான் மேற்கோள் ஆகையில், விருத்தி. பெருங்கடல் சூழ்ந்த பூவுல காதி மற்றுண்டாகிய செல்வமுடைய வுலகங்களியாவையுந் தானுளவாக்கவு நிலைபெறக் காக்கவு மழிவுறநீக்கவும் வல்லவனுகி யாதியுமந்தமுமளவுமொப்பு மெதிருமில்லாதவனு யெவ்வகைப்பொருளினு மேனின்றுயர்ந்த கடவுளொருவனை மற்றைத் தேவரை நீக்கித் தனியே பணிந்து போற்றி மாவிராவிருளைநீக்க விப்பூவுலகிற்றேன்றிய பருதியைப்போல மனவிருளாகிய வஞ்ஞானத்தை நீக்க வக்கடவுளோதித் தந்த வேதநூலையோதுங் குருவே யாகி யம்மெய்க் கடவுளை யெவருமறிந்து வணங்கவு மவனே தந்த வேதநூலெங்கும் வழங் கவு மாசையே மனத்துட்டூண்டி யேவியதாக விதுவேகாரணமெனத்தா னெழுத்துச் - சொற் - பொரு - ளியாப் - பணியென வைந்திலக்கணப் (1) பொருள்களைக் கல்லாதவருங் கண் டுணரும்படி தெளிவாகவிளக்கத் துணிந்ததைப்பற்றித் தொன்னூல்விளக்கமென விந்நூற் பெயராகிப் பிறதமிழ்நூலோர் முன்னுரைத் தோதியவற்றைத் தானுடன்படுத்தியுந் தமிழ்ப் புறநூலோர் விதித்தவற்றுட் சிலதான்பொருத்தியு மீண்டொரு வழிநூலென முடித் துரைத்தா ரிவராரோ வெனின் மெய்யங் கடவுடந்த மெய்ம்மறைநூலிற் குருக்களாகச் செல்வவிரோமைநாட்டினின் றெழுந்தருண் முனிவருளொருவராகிய வீரமாமுனி யென்பா ரெனக் கண்டுணர்க.

ஆகையிலினிவருஞ் சூத்திரவிதியு முரையின்விரிவு மம்மாமுனிதான் றரவே செவி வாயாகப் பருகி நெஞ்சு கண்ணுக வுணர்ந்துகொள்வது கல்வி விரும்பினர்கடனே, என்ற வாறு. பதிகம்-பாயிரம்-முகவுரை-ஒன்றும்.

பொதுப்பாயிரம். — முற்றிற்று.

சிறப்புப்பாயிரம்

1. சொன்னூலடையாத் தொகைக்குணத்தொன்று
முன்னூறந்த முதல்வனைப்போற்றி
நன்னூலாய்ந்தோர் நவின்றவைப் பொருட்
டொன்னூல்விளக்கமுன் சொற்றுதுமெழுத்தே.

(என்பது) சொல்லத்தகு மெந்நூல்வகையானு மடையப்படாத தேவகுணங்களி யாவை யுந் தொகுத்துளனுகி மிக்காரு மொப்பாருமின்றி யொன்றுய் நிற்குங் கடவு ளிவனென முதனூலாகிய வேதநூலைத் தந்த முதல்வனைப் பணிந்து நானே வழுவில வுரைக்கவு மற்ற வர் பயனெடு கேட்பவுந் துணைச் செயல் வேண்டி யவனடி தலைமேலணிந்து போற்றி முன் செந்தமிழ்நூற் கற்றேருரைத்த வெழுத்துச் சொற்பொருளியாப்பணி யென வைம்பொரு ளிலக்கணங்களை விளக்கத் தொடங்கி முன்னீண்டெழுத்தியல் பின்னதென வுரைத்துக் காட்டுது மாகையி லிதுசிறப்புப்பாயிரம்.

---

(1) பொருட்கள் 1ம் 3ம் 5ம் பதிப்புகளில் என்றிருப்பதைத் திருத்தினும், 3ம் 5ம் பதிப்பில் பக்கம் 43, 64 பொருள்கள்.

என்னை, தெய்வ வணக்கமுஞ் செய்பொருள் விளக்கமுஞ் செப்புவதாகுஞ் சிறப்புப் பாயிரம். ஆதலா லிலக்கிய வகையான் மூத்தோர்புதைத்த வரும் பயனுகிய பொருளைக் கண்டறிந் தெடுப்பதற் கிலக்கணநூலே விளக்காம். விளக்குதலால் விளக்கென்னப்பட்டது. ஒளிவிடா மூடினதீபத்தாற் பயனில்லை யென்றதுபோல முன்னோர்தந்த விலக்கணநூலெலாஞ் செந்தமிழ்ச் சிறந்த மொழியோடு மூடிக்கிடப்ப விக்காலத் தவ்விளக்கொளியைக் காண் பாரில்லாததற் கொருபயனு மில்லை.

தென்மொழியார்க்கு வடமொழியைத் தானுணர்த்தக் கருதி யவர்முன்னறிந்த தமிழ்ச்சொற் கொண்டல்லோ வடமொழிப்பயனை யுரைத்தல் வேண்டு மாகையான் மூத் தோர் புதைத்த நூனலம் விளங்கவுங் கல்லாதவரும் பயன்கொண்டுணரவு நானே யதன் மேற்கவித்த போர்வைநீக்கி யறிஞர் முன் கொளுத்தின தீபமெவர்க்கு மெறிப்பக் கையி லேந்தினுற்போல வவர்முன் செந்தமிழ் மொழியான் மறைத்த விலக்கணநூலை யிளந்தமி ழுரையால் வெளிப்பொருளாக்க நினைந்தேனுயினு முன்னோர்தந்த யாவையும் விரித் துரைத்தா லிந்நூலும் பெருகிக் கண்டவ ரஞ்சித் துணியாரென்று கருதி முனமிகவறிய வேண்டுவ தொன்றைத் தெரிந்து தருவேன்.

இறகு முளைத்து முற்றுமுன்னே தாயிரை கொண்டு வருவதன்றியே பறக்கும் பருவம் வந்தபின் றாமேமேய்வன பறவை யலவோ வவ்வாறிங்ஙன நானு மூத்தோர் சொன்னதை அவரவர் தாமே கண்டுபிடிக்க வேண்டுவதை மாத்திரம் விதிவிரித்துரைப்பேன்.

அதன்பின் முளைத்த சிறகை விரித்து மேற் பறந்து மேய்ந்தாற் போலவுந் தந்த பாசத்தைப்பற்றி மலையொத்துயர் மதயானையையேறி நடாத்தினுற் போலவுஞ் சிறிதோர் தெப்பத்தைப் பிடித்துப் பெரும் வெள்ளத்தை நீந்தினுற்போல மிங்ஙன நான்றந்தவற்றைக் கொண்டு செந்தமிழ்ப் பெருங் கடனீந்தவு முழுகவுஞ் செய்து முற்றுல கெல்லாம் புகழப் புலவர் புதைத் தப்பெரும்பய னவமணித்தா மெடுத்தணிவதே யெளிதா மங்ஙனமீண்டு நானொரு புதுநூலாயினுந் தொன்னூலிற் கொருபுதுவழியாயினுங் காட்டுவ துணரா துயர்ந்த முன்னோர் தந்த நூலை விளக்குதற் கருதித் தெளிவுவேண்டி வேறுவேறுய்ச் சூத்திரந் தரினு மூத்தோ ருரைத்த பற்பலவற்றையும் பொருத்துதும்.

ஆயினுஞ் செந்தமி ழுணர்ந்தோர் வழியே யன்றிப் புறனடையாய்ச் சில விகற்பம் புறநூல் வழியே சென்று காட்டுது மாகையான் முன்னோர் நூலினடையினும் விகற்ப நடையினு மெழுத்துச் சொற்பொருளியாப் பணியென வைந்திலக்கணங்களை யைந்ததி காரமாக வீண்டு பிரித்துக் கூறுதும். கூறிய நடையில் வழுவினு முற்றறிதுணர்ந்தோ ரிகலா தன்பொடு தாங்கிக் கண்ட வழுவினைத் தீர்ப்பது மீண்டைம்பொருளை யுரைத்த வழியிழி வெனினுந் துணிந்த கருத்து நன்றென வொருவாதி வற்றைக் கொள்வதுங் கடனே, எ-று.

சிறப்புப்பாயிரம். — முற்றிற்று.

நன்னூல்: மயிலைநாதர் உரை பார்க்கவும்.

முதலாவது :-

எழுத்ததிகாரம்

முதலாவதெழுத்தியல்

2. (1) தோற்றமும்வகுப்புந் தோன்றும்விகாரமுஞ்
சாற்றுளித்தோன்றுந் தானெழுத்தியல்பே.

(என்பது) எழுத்திலக்கண மாமாறுணர்த்துதும்.

எழுத்தின் றோற்றமும் வகுப்பும் விகாரமும் என்றிம்மூன்றனுள் எழுத்து வகைப்பா டெல்லா மடங்கும்.

என்னை, தோற்றமென்புளி, எழுத்துப்பிறக்குமிடமும், முறையும், எண்ணுமென வும்; வகுப்பென்புளி, முதல்சார்புயிர் மெய்முதலியகூறுபாடெனவும்; விகாரமென்புளி, பதத்திலும்புணர்பிலும் வருந்திரிபாக்கமுதலிய வேறுபாடெனவுந்தோன்றும், எ-று. உளி எ-து. இடம், உழியென்பாருமுளர். (க)

3. (2) உயிரிடை யினமிடறுரம்வலிபுச்சிமெலியியை
முதலிடமாயிதழ் மூக்கணம்பன்று
வைந்துணையிடத்தா மக்கரப்பிறப்பே.

(எ - து) எழுத்தின்றோற்ற மாமாறுணர்த்துதும்.

உதானவாயுவின் காரணமாக எழுத்தெல்லாம் பிறக்குமாயினும் அவற்றுட்பன்னி ருயிர்க்கும், ஆறிடை யினத்திற்கும், மிடறேமுதலிடமாகவும்; ஆறுவல்லினத்திற்கும், நெஞ்சே முதலிடமாகவும்; ஆறுமெல்லினத்திற்கும், உச்சியேமுதலிடமாகவும்; அன்றி உதடும், மூக் கும், அண்ணமும், பல்லும், நாவும் என விவ்வைந்தே துணையிடமாகவும்; எழுத்தெல்லாம் பிறக்குமென்றுணர்க.

ஆயினும் இவற்றையும் எழுத்தின்முறையையும் எண்ணையும் உணர்த்துவ துறுபய னின்றிப் பொழுதழிவாகையானும், இனிச் சிலவுரைப்பது முறையா மென்றமையானும், இங்ஙன மவற்றைநீக்கி எழுத்தின்வகுப்பும் விகாரமுமெனு மற்றிரண்டையும் விளக்கிக்கூறு தும். இதன் விரிவையுணரவேண்டில் தொல்காப்பியத்துட் காண்க. அதனினும்விரிவு பேர கத்தியம் நன்னூல், எ - று. (உ)

முதலாவதெழுத்தின் றோற்றம். — முற்றிற்று.

---

(1) தொல்: எழுத்தியல், பிறப்பியல், புணரியல் — சொந்த மொழி - இவ்வாறு சிந்தனே.
தொன்னூல்: பிறப்பியல், எழுத்தியல், புணரியல் — அந்நிய மொழி - இவ்வாறு சிந்தனே.

(2) அகத்: சூத்: 61.
எ-று. — என்றவாறு. எ-து. — என்பது.

இரண்டாவதெழுத்தின் வகுப்பு

4. முதல்சார்புயிரே மூவினமெய்யே
முதற்கண்ணெழுத்தே மொழியீற்றெழுத்தே
யுயிர்மெய்குறி னெடிலோடுமாய்த
மாறுகுறுக்க மளபெடையிரண்டு
மாத்திரைப்புணர்பென வகைப்படுமெழுத்தே.

(எ - து) எழுத்தின்வகுப்பா மாறுணர்த்துதும்.

இம்முதற்சூத்திரத்துள் இனிச்சொல்லக் குறித்தவகை யெல்லாந் தொகைப்படக் காட்டித்தந்தனம். ஆகையி லவ்வவச் சூத்திரத்துள் அவ்வவற்றை முறையேகாண்க. (க)

5. முதலெழுத்துயி ரீராறுடன்மூவாறே
சார்பெழுத்துயிர்மெய்ய தனியாய்தத்தோ
டஃகிய இ, உ, ஐ, ஔ மவ்வாய்த
முயிரளபொற்றள பொருபஃதென்ப.

(இ - ள்.) முதல்சார்பெழுத்தா மாறுணர்த்துதும்.

தமிழெழுத் தெல்லா முதலெழுத்தெனவுஞ் சார்பெழுத்தெனவும் இருவகைப்படும். இவற்றுட் பன்னீருயிரும், பதினெண்ணொற்றும், ஆக முதலெழுத் தொரு முப்பதுமாம்.

சார்பெழுத்தோவெனில், உயிர்மெய்யும், ஆய்தமும், குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஐகாரக்குறுக்கமும், ஔகாரக்குறுக்கமும், மகரக்குறுக்கமும், ஆய்தக்குறுக்கமும், உயிரளபெடையும், ஒற்றளபெடையும் ஆகச்சார் பெழுத்தொருபஃதாகும், எ - று.

முதலுக்கு, தலைமை - பிரதானம் எ - ம் சார்புக்கு, தலைமையின்மை, அப்பிரதானம், எ - ம். கூறுவர், எ - று. (உ)

6. (1) எ, ஒவ்வும் றனழவ்வுமென்றைம்முதலு
முயிர்மெய்யுயிரள பொழியெண்சார்பு
மந்தமிழ்க்குரிய வாரியமும்பிறவே.

(எ - து) முன்சொன்னவற்றிற்குச் சிறப்புவிதி விகற்பித்துணர்த்துதும்.

கூறியமுப்பது முதலெழுந்துள்ளே, எகர ஒகரங்களென இரு குற்றுயிரெழுத்தும், றனழவென மூன்றொற்றும். ஆகமுதலெழுத்தைந்தும், கூறிய பத்துச் சார்பெழுத்துள்ளே, ஆய்தமும், ஒற்றளபும், ஆறுகுறுக்கமும் என வெண்சார்பெழுத்துந் தமிழ் மொழிக்குரியன, அன்றி யாரியமொழிக்குள்ளில்லன. சொன்னவிப் பதின்மூன்றெழுத் தொழிந்த பத்துயிர் பதினேந்தொற்றென முதலெழுத் திருபத்தைந்து முயிர்மெய் யுயிரளபெனச் சார்பெழுத்திரண்டுமாகத் தமிழிற்கு மாரியத்திற்கும் பொதுவெழுத் திருபத்தேழென்றுணர்க.

அன்றியுந் தென்மொழிக் கில்லனவாகி, வடமொழிக் குரியவெழுத் தெத்துணையோவெனில், ஆரியமொழியில் வழங்கு முயிர்பதினாறுள்ளும் மெய்முப்பத்தேழுள்ளும் சொன்ன பொதுவெழுத்தன்றி உயிராறும், ஒற்றிருபத்திரண்டுமாக வடமொழிக் குரியவெழுத் திருபத்தெட்டெனக்கொள்க.

---

(1) *சார்பெழுத்து: விரிவு இல. விளக்கம் - பக். 22. கழகப் பதிப்பு - 1973. புலவர் சேயொளி உரைக்குறிப்பு நோக்குக. சார்ந்த எழுத்து: தொல்காப்பியர்.*

(2) *அகத்தியம்: சூத்: 54; இலக்கணக் கொத்து சூத்: 7. அவிநயம்: சூத்: 114.*

இங்ஙனம் ஆரியமொழிகளைத் தமிழிடத் துரைக்குங்காலைப் பொதுவெழுத்தால் வரும் பதமே சிறப்புடைத்து; அல்லன வருதல் சிறப்பன்றெனக்கண்டுணர்க.

"ற ன ழ எ ஒவ்வு முயிர்மெய்யு முயிரள.
பல்லாச்சார்புந்தமிழ் பிறபொதுவே." நன்: சூத்: 150. (௬)

7. [1] இடுகுறிகாரண மிவைபொதுச் சிறப்பென வீரிரண்டாகு மெழுத்தின்பெயரே.

(எ - து) தமிழில் வழங்கு நாற்பதுவகை எழுத்திங்ஙனம் வேறுவேறாய் விளக்கா முன்னர் வழங்கு மவற்றின் பெயரைக் கூறுதும்.

அவைநால்வகைப்படும். இடுகுறிப் பொதுப்பெயரும், இடுகுறிச் சிறப்புப்பெயரும், காரணப் பொதுப்பெயரும், காரணச் சிறப்புப்பெயரு மென்றுணர்க.

(உதாரணம்) உயிரே, உயிர்மெய்யே, உடம்பே, என்பன இடுகுறிப்பொதுப்பெயர்.
அவற்றுள் அ, ஆ, கா ங முதலிய இடுகுறிச் சிறப்புப்பெயர்.
குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம்முதலிய காரணப்பொதுப்பெயர்.
குற்றிய லுகரங் குற்றியலிகரமுதலிய காரணச்சிறப்புப் பெயரெனக்கொள்க.

ஆகையில், (உ - ம்) நாகு, எனுமொழி யீற்றெழுத்து இடுகுறிப் பொதுப்பெயரால் உயிர், மெய், எ - ம் இடுகுறிச்சிறப்புப்பெயரால், கு, எ - ம். காரணப்பொதுப் பெயரால், குற்றெழுத்து, எ - ம். காரணச் சிறப்புப் பெயரால், குற்றியலு கரம் எ - ம். பிறவுமேற் கும் பெயரொடு வழங்கும், எ – று. (௪)

8. அம்முதலீராறுயிர் கம்முதன்மூவாறுடல் குறில் அ, இ, உ, எ, ஒவ்வைந்தேநெடில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ வேழே.

(எ - து) உயிரு முடலுங் குறிலு நெடிலு மாமாறுணர்த்துதும்.

உயிரெழுத்துப் பன்னிரண்டு; (உ - ம்) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ எ - ம். மெய்யெழுத்துப் பதினெட்டு; (உ - ம்) க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன். எ – ம். பன்னீருயிர்களுட் குற்றெழுத்தைந்து, (உ - ம்.) அ, இ, உ, எ, ஒ எ - ம். நெட்டெழுத்தேழு, (உ - ம்) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எ - ம். வரும். உயிராய்வரினு மொற்றெடுத் துயிர்மெய்யாய் வரினுங் குறில் குறிலே, நெடில் நெடிலேயாம். உயிருக்கு ஆவி, அச்சு, சுரம் எ - ம். மெய்க்கு, புள்ளி, உடல், உடம்பு, ஒற்று, அல், வியஞ்சனம் எ - ம்.

குற்றிற்கு, குறில், குறுமை, இரச்சுவம் எ - ம். நெடிற்கு, நெடில், நெடுமை, தீர்க்கம் எ - ம். கூறுவர், எ - று. (௫)

9. வலி கசட தபற மெலி ஙஞண நமன இடை யரல வழள வெனமூவினமே.

(எ - து) மூவினமாமாறுணர்த்துதும். முன்சொன்ன பதினெட்டொத் றெழுத்து மூவின மாக வகுக்கப்படும். அவை வல்லினமாறு. (உ - ம்) க், ச், ட், த், ப், ற், எ - ம். மெல்லின மாறு. (உ - ம்) ங், ஞ், ண், ந், ம், ன், எ - ம். இடையினமாறு. (உ - ம்) ய், ர், ல், வ், ழ், ள், எ - ம். வருமெனக் கண்டுணர்க.

---

(1) அகத்தியம். சூத்: 56.

வலிக்கு, வலி-வன்மை-வன்கணம்-பரிகம் எ-ம். மெலிக்கு, மெலிமென்மை-மென் கணம்-அநுநாசிகா எ-ம். இடைக்கு, இடை. இடைமை-இடைக்கணம்-அந்தத்தக்கரம் எ-ம். கூறுவர், எ-று.

10. (1) உயிர் க ச த ப ஞ ந ம வ ய முதற்கே
எ, ஒ, ஔ வு மெல்லினஙவ்வு
நீத்துயிர் ண ம ன் விடையினமீறே.

(எ-து) முன்சொன்ன முப்பது முதலெழுத்துள்ளே மொழிமுதற்கண் வருமெழுத்து மொழியீற்றின்கண் வருமெழுத்தும் அவையிவை யென்று காட்டுதும்.

பன்னீருயிரும் கம்முத லொன்பதுயிர்மெய்யு மொழிமுதற்கண் வரப்பெறு மெனக் கொள்க.

(உ-ம்) அலை, ஆலை, இனம், ஈனம், உழி, ஊழி, எரி, ஏரி, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம் எ-ம். கனி, சனி, பனி, தனி, ஞாலம், நதி, மதி, வதி, யதி எ-ம். பிறவு மன்ன.

அன்றியுங் குற்றெகரங் குற்றொகர மௌகார மொழித்தொழிந்த வொன்ப துயிரும், ண், ம், ன், ய், ர், ல், ட், ழ், ள் என வொன்ப தொற்றும் மொழி யீற்றின்கண் வரப் பெறு மெனக் கொள்க.

(உ-ம்) பல, பலா, பரி, தீ, உரு, மகடூ, சே, கலை, ஓ எ-ம். மண், கம், மின், மெய், சீர், பல், தெவ், கூழ், கள் எ-ம். பிறவுமன்ன.

அன்றியு மேவலிடத்து நொ எ-ம். து எ-ம். கௌ எ-ம். உரிஞ் எ-ம். பொருந் எ-ம். வருமெனக் கொள்க. யதி எ-து முனிவர், எ-று. (எ)

11. உயிரேமெய்யணைந் துயிர்மெய்யாகு
மவையிரு நூற்றெருபத்தா றென்ப.

(எ-து) உயிர்மெய்யா மாறுணர்த்துதும்.

உயிருமெய்யுங் கூட்டி உச்சரிக்கப்படா நிற்கு மெழுத்தே உயிர்மெய் யெனப்படும். (உ-ம்) க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ எ-ம். வரும். ஆகை யிற் பன்னீருயிரு மூவாறு மெய்யோடுறழ, உயிர்மெய் இருநூற் றெருபதினுறென்ப. அரைமாத்திரையாகிய (2) மெய்யொடு ஒருமாத்திரையாகிய குற்றுயிரும் இரண்டு மாத்திரை யாகிய நெட்டுயிரும்கூடி நின்றவழி ஒன்றரை மாத்திரையும், இரண்டரைமாத்திரையும், இசையாது உயிரளவாகிய ஒருமாத்திரையும் இரண்டுமாத்திரையும், இசைப்பனவாம். ஒலி வடிவினும், வரிவடிவினும், முதலெழுத்தின்வேறாய் உயிரும் மெய்யுங்கூடிப் பிளவுபடா தொலித்தலான் உயிர்மெய்யெனப் பெயராய்ச் சார்பெழுத்தி னுென்றாயின. ஒலி வடிவு = செவிப்புலனறிதல். வரி வடிவு = கட்புல னறிதல். எ-று. (அ)

12. நீட்டல் சுழித்தல்
குறின்மெய்க் கிருபுள்ளி.

(எ-து) எழுத்து வடிவ மாமாறுணர்த்துதும்.

மெய்யின் வடிவும், உயிர் மெய்யின் வடிவும், பலமுறை வேறுபடாமையானும், எக ரம் ஏகாரம், ஒகரம் ஓகாரம், எப்போதும் ஒருவடிவாகையானும், மயக்க நீப்பது வேண்டி மேற்புள்ளி கொடுத்தார் புலவர்.

---

(1) சூத். 10ல் ஙகரம் நீக்கிவிட்டார். நன்னூலில் 102ம் சூத்திரத்திலிணைத்துவிட்டார்.
(2) முதற் பதிப்பில் இவ்வாறிருக்கிறது. இது சரி.

ஆகையில் குற்றெழுத்தின் மேனீண்ட புள்ளியும், ஒற்றெழுத்தின் மேற்சுழித்த புள்ளியும், வருமென்றுணர்க. (உ-ம்) எரி-எரி, ஒதி-ஒதி, மண்மகள்-மண்மகள், தாம்-தாம், கணமணி-கண்மணி, எ-ம் வரும்.

சூத்திரம். "மெய்யி னியற்கைப் புள்ளியொடு நிலைய, லெகரவொகரத் தியற்கையு மற்றே." எ-ம். கூறினர், எ-று. தொல்: எழு: 15. 16. க. ப. அறவாணன். பதிப்பு. (கூ)

13. ஆய்தங் குறில் வலிக்காகு நடுவே யஃதீற்று ல ளத்திருந்துளி யஃகும்.

(எ-து) குறுகாதவாய்தம் குறுகியவாய்தமாமாறுணர்த்துதும்.

ஆய்தங்குற்றெழுத்திற்கும், உயிரொடுபுணர்ந்த ஆறுவல்லெழுத்திற்கும், நடுவே வரப் பெறும். இதனுருவோ வெனில் முப்புள்ளி வடிவு; இது மெய்யெழுத்தின் றன்மைத்தாவ தன்றி அதன்மே லுயிரேறப்பெறுதெனக்கொள்க. (உ-ம்.) (1) எஃகு, கஃசு, கஃடு, பஃது, கஃபு, கஃறு என வரும். இவ்வாறுடன், அஃகடிய எனப் புணர்ச்சி விகாரத்தால் வருமாய்த மும், அஃகான் எனச்செய்யுள் விகாரத்தால் வருமாய்தமுங்கூடி எட்டாதல்காண்க. அஃ கேனம், தனிநிலை, புள்ளி, ஒற்று, ஆய்தம் எனினு மொக்கும்.

இவ்வாறு வருதல் குறுகாதவாய்தம். அன்றியும் ஈற்று லகார ளகாரங்கள் தவ்வொடு புணருங்கால் திரியும்: திரிந்தவழியின் ஆய்தம் வரும்; வரினுங்குறுகி ஆய்தக் குறுக்கமாகும். (உ-ம்) கல் + தீது = கஃறீது, முள் + தீது = முஃடீது, எ-ம். வரும்.

ஆய்தமென்ற திடுகுறிப்பெயர். முதலெழுத்து முப்பதின்றல்லாது வேறாய் நிற்ற லானும், உயிர்போலத் தனித்தொலியாதுமாய் மெய்போல உயிரேறப் பெறுதுமாய் முத லெழுத்தாந் தன்மை எய்தாமையானும், இரு மருங்கும் வருமெழுத்தைச் சார்ந் தொலித் தலானுஞ் சார்பெழுத்தி னொன்றாயின, எ-று. (க0)

14. யம்முதலிய்யா மிருகுறளுக்கெடி லஃகுமற்று மசைச்சொன்மியாவே.

(எ-து) குற்றிய லிகரமாமாறுணர்த்துதும்.

நிலைமொழிக் குற்றியலுகரத்தின் முன்னே வருமொழி முதற்கண் யகரம் புணர்ந்து கெடுமிகரமும், முன்னிலையசைச் சொல்லாகிய மியா வெனு மொழியில் வந்த இகரமும், குற்றியலிகரமாகும்.

(உ-ம்) நாகியாது, ஈறியாது, கூடியாது, தேசியாது, ஐதியாது, கோடியாது, கௌடி யாது என நெடிற்றொடர் மொழிக்குற்றிய லிகரமேழுந்.

எஃகியாது என ஆய்தத்தொடர்மொழிக் குற்றிய லிகரமொன்றும்,

வரகியாது, பலாசியாது, குழலினிதியாழினிது, பாவீறியாது, உருபியாது, அருபி யாது, வானேறியாது, ஒரைதியாது, செங்கோடியாது என உயிர்த்தொடர்மொழிக் குற்றிய லிகரம் பதினொன்றும்,

கொக்கியாது, கச்சியாது, பட்டியாது, (2)முத்தியாது, செப்பியாது, பற்றியாது என வன்றொடர்மொழிக் குற்றிய லிகரமாறும்,

சங்கியாது, மஞ்சியாது, துண்டியாது, பந்தியாது, அம்பியாது, கன்றியாது என மென்றொடர் மொழிக்குற்றிய லிகரமாறும்,

---

(1) எஃகு + கூர்மை. பஃது + பத்து
கஃசு +
கஃடு +
கஃபு +
கஃறு + ஒருவகை நிறம்.

(2) திருக்கோவையார்:
85ம் பாட்டு. முத்து + யாம் } முத்தியாம்.
முத்தி + யாம் }

நொய்தியாது, சார்பியாது, சால்பியாது, மாழ்கியாது, தெள்கியாது என இடைத் தொடர் மொழிக்குற்றிய லிகரமைந்தும்,

கெண்மியா, சென்மியா என மியா வெனுமசைச் சொல்லி னிகரமொன்றும், ஆக முப்பத்தேழும் வந்தன.

அவிநயச் சூத். 14. "வல்லெழுத்தாறே டெழுவகையிடத்து, முகரமரையாம் யகர மோடியையி, னிகரங்குறுகும் என்மனுர் புலவர்.'' எ–து. குற்றியலுகரந் திரிந்த இகர மாறும், மியாவென்னு மசைச்சொல்லி னிகரமொன்றும், ஆகக்குற்றியலிகரம் ஏழேயாயினும், இடமும் பற்றுக்கோடுஞ்சார்ந்து முப்பத்தேழாயின. இகரந் தன்மாத்திரையிற் குறுகி ஒலித் தலின் காரணத்தால் முதலெழுத்தி னெலிவடிவின் வேறுய்க் குற்றியலிகரமெனப் பெயராய்ச் சார்பெழுத்திறென்றுயின.

நன்னூல் சூத்: 93. "யகரம்வரக் குறளித்திரி யிகரமு, மசைச்சொன்மியாவி னிகர முங்குறிய.'' எ-து. மேற்கோள் எ-று. (கக)

15. தனிக்குறிலல்லவற் றிறுதிவன்மை
யூர்ந்துளிக்குறுகு முகரமென்ப
(1)தொடருயிருக்குறடுடைத்துனும்யவ்வரின்
உ, இ யாஞ்சில முற்றுகரமு மற்றே.

(இ - ள்.) குற்றியலுகரமாமாறுணர்த்துதும்.

தனிநெடிலேழும், ஆய்தமொன்றும், மொழியிடையிறுதிகளில் வரப்பெறுத ஒளகார மொழித் தொழிந்த உயிர்பதினென்றும், வல்லெழுத்தாறும், மெல்லெழுத்தாறும், வல் லெழுத்துக்களோடு தொடராத வகரமொழித் தொழிந்த இடையெழுத்தைந்தும், ஆகிய முப்பத்தாறெழுத்தினுள் யாதானுமொன்று ஈற்றுக்கயலெழுத்தாய்த் தொடரப்பட்டு மொழி யிறுதிக்கண் வல்லெழுத்துக்களுள் யாதானுமொன்று பற்றுக்கோடாக அதனே யூர்ந்து வரு முகரந் தன்மாத்திரையிற் குறுகும்; அது குற்றியலுகரமாம்.

(உ. – ம்) நாகு–ஈறு–கூடு–தேசு–ஐது கோடு–கௌடு என நெடிற்றொடர் மொழிக் குற்று கர மேழும், ஏஃகு என ஆய்தத்தொடர்மொழிக் குற்றுகர மொன்றும், வரகு-பலாசு-பரிசு-பாவீறு உருபு அருபு வானேறு ஔரைது என உயிர்த்தொடர் மொழிக்குற்றுகரம் பதி னென்றும், கொக்கு-கச்சு-பட்டு-முத்து-செப்பு-பற்று என வன்றொடர்மொழிக் குற்றுகர மாறும்,

சங்கு-பஞ்சு-துண்டு-பந்து–அம்பு–கன்று என மென்றொடர்மொழிக் குற்றுகர மாறும்,

நொய்து-சார்பு-சால்பு-மாழ்கு-தெள்கு என இடைத் தொடர்மொழிக் குற்றுகரமைந் தும்,

ஆகமுப்பத்தாறும் வந்தன.

பல்காயனுர் சூத் 26, 25. "நெடிலேகுறிலிணை குறினெடிலென்றிவை, யொற்றொடு வருதலொடு குற்றொற்றிறுதியென், றேழ்குற்றுகரக் கிடனென மொழிப." எ–ம். "எழுவகை யிடத்துங் குற்றியலுகரம் வழுவின்றி வருஉம் வல்லாறூர்ந்தே.'' எ-ம். கூறினர். நுந்தை யெனு முறைப்பெயருகர முங்குறுகும்.

அன்றியும், ஆறுவல்லினத்தோ டீற்றுகரம் தனிக்குறிலிணைந்துவரின் குறுகாது. (உ-ம்) எகு-பசு–நடு–விது-வபு-மறு என விவை வல்லினத்தோடு கூடியவீற்று கரமாயினும் தனிக்குறிலிணைந்தமையால் குற்றியலுகரமல்லன, முற்றிய லுகரமாம்.

---

(1) சூத்: 15. தொடர் + உயிர் + உக்குறள் + துடைத்து + உனும்.

நன். சூத். 94. "நெடிலோடாய்த முயிர்வலிமெலியிடை தொடர் மொழியிறுதி வன்மை யூருகர மஃகும்பிறமேற்றொடரவும்பெறுமே" எ-து. மேற்கோள். (வபு. = உடல்.) அன்றியுங் குற்றியலுகரத்தின்கீழ் உயிர்வரி னுகரங்கெட்டு நின்ற வொற்றின்மேல் வருமுயிரேறவும், யவ்வரினிய்யாகி அவ்வாருகவு மிங்ஙன மொரோவிடத்து முற்றியலுகரமும் இவ்விரு வழியாற் கெடவுமாமெனக்கொள்க.

(உ-ம்) காடலர்ந்தது, வண்டிமிர்ந்தன, எ-ம். கோட்டியானை, குழலினிதியாழினிது எ-ம். இருவழிக் குற்றியலுகரங்கெட்டன. தெளிவரிது, கதவடைத்தான் எ-ம். அறிவியாது, விழவியாழ் எ-ம். இருவழி முற்றுகரங்கெட்டன. ஆயினுந் தனிக்குறிற்சேர்ந்த முற்றியலுகரம் எவ்வழியானுங் கெடாதெனக்கொள்க.

(உ-ம்) கடவுண்டான், மதுவருந்தினன் எ-ம். நடுயாமம், இப்பசுயாது எ-ம். இருவழித் தனிக்குறின் முற்றியலுகரங் கெடாதன, பிறவுமன்ன.

நன். சூத். 164, 204. "உயிர்வரினுக்கு றண்மெய்விட்டோடும்." எ-ம். "உடன்மேலுயிர் வந்தொன்றுவதியல்பே." எ-ம் "யவ்வரினிய்யாம்." எ-ம். மேற்கோள்.

அன்றியும் (சிலமுற்றுகரமுமற்றே) யென்றமையால், (உ-ம்) பானு + உதயம் = பானுதயம் எ-ம். வரும். இடமும் பற்றுக்கோடுஞ்சார்ந்து உகரந் தன் மாத்திரையிற்குறுகி ஒலித்தலின் காரணத்தான் முதலெழுத்தி னொலிவடிவின் வேருய்க் குற்றியலுகரமெனப் பெயராய்ச் சார்பெழுத்தி னொன்ருயின, எ-று. (கஉ)

16. ஐத்தனித்தள பெடுத்தன்றி மூவிடத்து மௌவு முதலிடத்தஃகுமென்ப

(எ-து) ஐகாரக்குறுக்கமு மௌகாரக்குறுக்கமு மாமாறுணர்த்துதும்.

ஐகாரந் தனிநின்றவிடத்து மளபெடுத்தவிடத்துங் குறுகாமன் மற்றை மொழிமுதலிடைகடைவரின் றன்மாத்திரையிற் சுருங்கி ஐகாரக்குறுக்க மெனப்படும்.

(உ-ம்) ஐப்பசி – மொழிமுதலும், மடையன் – மொழிக்கிடையும், குவளை – மொழிக் கடையும் குறுகினவாறு காண்க. ஔகாரமு மொழிமுதலிடத்துக் குறுகும்.

(உ-ம்) ஔவியம், கௌவை எ-ம். வரும். சூத்திரம். "அளபெடைதனியிரண் டல்வழி ஐஔ, வுளதாமொன்றரை தனிமையுமாகும்" எ-ம். கூறினர்.

ஐகார ஔகாரக்குறுக்கமும் ஒவ்வொன்றே யாயினும் இடவகையால் ஐகாரக்குறுக்க மூன்றும் ஔகாரக்குறுக்க மொன்றுமாம். ஐகாரம் ஔகாரம் இடஞ்சார்ந்து தன்மாத்திரையிற்குறுகி ஒலித்தலின் காரணத்தால் முதலெழுத்தி னொலிவடிவின்வேருய் ஐகார ஔகாரக் குறுக்கமெனப் பெயராய்ச் சார்பெழுத்தி னொன்ருயின, எ-று. (கங)

17. மகரம் ல ளக்கீழ் வஃமேற் குறுகும்.

(இ-ள்.) மகரக்குறுக்கமாமாறுணர்த்துதும்.

இனிச்சொல்லும்படி லளத்திரிந்து னணவாகியபின் மகரம் வரி னதுகுறுகும்.

(உ-ம்) போலும், மருளும், என்பதற்கு போன்ம், மருண்ம், என்பதாம். என்னெனில், அம்மகரங் கான்மாத்திரையாகக் குறுகிநிற்கும்,

(உ-ம்) "சிதையுங் கலத்தைப்பயினுற்றிரிந்துந் திசையறியுமீகானும்போன்ம்." எ-ம். "வெயிலியல் வெஞ்சுரமைய நீ யெய்தின், மயிலியன்மாதுமருண்ம்." எ-ம். அன்றியு மகர வீற்றுமொழியின்கீழ். வகரம்வரின் மகரங்குறுகும். (உ-ம்) மரம்வளர்ந்தது, கமலம்விரிந்தது. எ-ம். வரும். மகரக்குறுக்கமொன்றே யாயினும் இடவகையான் மூன்ருகும்.

இடமும் பற்றுக் கோடுஞ்சார்ந்து மகரந் தன் மாத்திரையிற் குறுகி ஒலித்தலின் காரணத்தால் முதலெழுத்தி னொலிவடிவின் வேறாய் மகரக் குறுக்கமெனப் பெயராய்ச் சார்பொழுத்தினொன்றாயின, எ-று. (கச)

18. உயிர்நெடி லினக்குறி லுற்றள பெடுக்கு
மொற்றள பெழும்வே றுற்றுக்குறிற்கீ
ழிஙைந்து ரழ வொழியிடை மெலியாய்தம்.

(இ-ள்.) அளபெடையாமாறுணர்த்துதும்.

அதுஉயிரளபெடை ஒற்றள பெடை யென விருவகைப்படும். அவற்றுள் உயிரள பெடையாவது, ஓசையுமளவும் பெறுவதுவேண்டி மொழியின்முதலே யிடையே கடையே நின்ற நெட்டெழுத் தெல்லா நீளப்பெறு மப்பொழு தொவ்வொன்றற் கினமாகிய குற் றெழுத்து வந்த அளபிற்குக்குறியாகநிற்கும். இவ்வாறு நெட்டெழுத்தேழு மளபெடுக்கும். அப்போததற் கதற்கினமாவன. ஆ அவ்வும், ஈ இவ்வும், ஊ உவ்வும், ஏ எவ்வும், ஐ இவ் வும், ஓ ஒவ்வும், ஔ உவ்வும், எனவினமாகும்.

(உ-ம்) ஆஅ-ஈஇ-ஊஉ-ஏஎ-ஐஇ-ஓஒ-ஔஉ என மொழி முதலினும், படாஅகை - பரீஇகம் - கொடூஉரம் - பரேஎகம் - கடைஇயம் - புரோஒசை - அனௌஉகம் என மொழிக் கிடையினும், கஹஅ - குரீஇ - மரூஉ விலேஎ - அசைஇ - அரோஒ என மொழிக்கடையினும் உயிர் அளபெடுத்துவந்தன. இவைசெய்யுட்கண்வருவன. அவைவருமாறு.

(உ-ம்.) "ஓஒதல் வேண்டு மொளி மாழ்குஞ் செய்வினை, யாஅது மென்னு மவர்." "உறூஉ அர்க்குறுநோ யுரைப்பாய் கடலைச், செறாஅஅய்வாழியநெஞ்சு." "அனிச் சப்பூக் கால்களையாள் பெய்தாணுசுப்பிற்கு, நல்லபடாஅபறை" என முறையேமொழிமுத லிடை கடை மூவிடத்தள பெடுத்தன.

அன்றியும் ஔகாரம் மொழிக்கிடையினுங் கடையினும் வராமையானும் அவ்விடங் களில் அது நீங்கலாகி அளபெடுக்கும். அளபெடை பத்தொன்பதுடனே "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே, யெடுப்பதூஉ மெல்லாமழை." என இன்னிசை நிறைக்கவருமளபெடையும், "உரனசை இயுள்ளந் துணையாகச்சென்றார், வரனசை இயின்னு முளேன்." எனச்சொல்லிசை நிறைக்கவரு மளபெடையுங்கூடி இருபத்தொன்றாதல் காண்க.

முதலெழுத்தினொலி வடிவினும் வரிவடிவிற் குறியினும் வேறாய் நெட்டுயிர் தன்மாத் திரையி னீண்டளபெடுத்தலின் காரணத்தா னுயிரளபெடையெனப் பெயராய்ச் சார் பெழுத்தி னொன்றாயின.

(1)சூத்திரம். "தனிநிலை முதனிலை யிடைநிலையீறெனு, நால்வகைப் படூஉ மளபாய்வரு மிடனே" எ-ம். "குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கு, நெட்டெழுத்திம்ப ரொத்த குற்றெழுத்தே, ஐஔ வென்னுமாமீரெழுத்திற், கிகர வுகர மிசை நிறைவாகும்." எ-ம். கூறினர்.

நன். சூத்: 91. "இசைகெடின்மொழிமுத லிடைகடை நிலை நெடி லளபெழுமவற்றவற் றினக்குறில்குறியே." இவை மேற்கோள்.

இசைகெடினும் இசைகெடாவிடினும் வழக்கச் சொல்லிடத்து முயிரள பெடை வழங்கு மென்றுணர்க.

அன்றியும் ஒற்றளபெடையாவது மெல்லினமாறும் ரழ வொழித்தொழிந்த இடை யின நான்கும் ஆய்தமும் இரு குற்றெழுத்தின் கீழும் ஒரு குற்றெழுத்தின் கீழும் மொழியி னிடையினும் கடையினு நின்றளபெடுக்கும். எடுத்த வளபிற்குக் குறியாக இரட்டித்து வரும்.

(உ-ம்). அரங்ங்கம், முரஞ்ஞ்சு, முரண்ண்டு, பருந்ந்து, அரும்ம்பு, முரன்ன்று, குர வ்வ்வை, அரைய்ய்யர், குரல்ல்கள், திரள்ள்கள், வரஃஃகு என இரு குற்றெழுத்தின் கீழிடை

(1) யாப்: விரு: பக்: 23. பவானந்தம்பிள்ளை பதிப்பு.

யினும்; மங்ங்கலம், மஞ்ஞ்சு, மண்ண்ணு, பந்ந்து, அம்ம்பு, மின்ன்னு, தெவ்வ்வர், வெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு, என ஒரு குற்றெழுத்தின் கீழிடையினும்; மடங்ங், உரிஞ்ஞ், அரண்ண், பொருந்ந், கனம்ம், பரன்ன், பகல்ல், திரள்ள் எனஇரு குற்றெழுத்தின் கீழ்க்கடையினும்; நங்ங், நஞ்ஞ், கண்ண், நந்ந், அம்ம், பொன்ன், தெவ்வ், செய்ய், கல்ல், வள்ள் என ஒரு குற்றெழுத்தின் கீழ்க் கடையினும் ஒற்றளபெடுத்துவந்தன. இவை செய்யுட்கண் வருவன. அவை வருமாறு.

(உ-ம்) "இலங்ங்குவெண்பிறைசூ டீசனடியார்க்குக், கலங்ங்குநெஞ்சமிலைகாண்." "எங்ங்கிறைவ னுளனென்பாய்மனனேயா னெங்ங் கெனத்திரிவாரின்." "மடங்ங்கலந்தமனனே களத்து. விடங்ங்கலந்தானைவேண்டு." "அங்ங்கனிந்தவருளிடத்தார்க்கன்புசெய்து, நங்ங்களங் கறுப்பாநாம்." என முறையே குறிலிணைக்கீழ் குறிற்கீழ் இடையினுங் கடையினும் நான்கிடத் தளபெடுத்தன.

அன்றியும் ஆய்தம் குறிலிணைக்கீழ்க் குறிற்கீழ்க் கடையில் வாராமையானும் அவ்விடங்களில் அது நீங்கலாகி அளபெடுக்கு மளபெடை நாற்பதுடனே "விலஃஃகு வீங்கிருளோட்டுமேமாத நிலஃஃகு முத்தினினம்." "எஃஃகிலங்கிய கையராயின்னுயிர், வெஃஃகுவார்க்கில்லை வீடு." எனக்குறிலிணைக்கீழ்க் குறிற்கீழிடையில்வந்த அளபெடையுங்கூடி நாற்பத்திரண்டாதல் காண்க. ஆயினும் ஒற்றள பெடை செய்யுளிடத்தே யன்றிப் பெறுதெனக் கொள்க.

அவிநயச் சூத்: 15. "வன்மையொடு ரஃகான் ழஃகானொ ழித்தாங், கன்மையாய்தமோடளபெழுமொரோ வழி." எ-ம். கூறினர்.

நன். சூத்: 92. "ஙஞண நமன வயலளவாய்த மளபாங் குறிலிணை குறிற்கீழிடைகடை, மிகலேயவற்றின் குறியாம்வேறே." இவை மேற்கோள்.

ஆய்தம், உயிர்க்குறிலும், உயிர் மெய்க்குறிலும் இருமருங்கு நின் றெழுப்ப இரு சிறகினு லெழும்பறவையி னுடல்போல எழுந்தொலித்தலால் இறுதிக்கண் விலக்கினர்.

ஒற்றுத் தன்மாத்திரையி னீண்டளபெடுத்தலின் காரணத்தான் முதலெழுத்தின் ஒலிவடிவினும் வரிவடிவிற் குறியினும் வேறாய் ஒற்றள பெடையெனப் பெயராய்ச் சார்பெழுத்தினொன்றாயின. அளபெடைக்கு அளபு, புலுதம் எ-ம். கூறுவர், எ-று. (கரு)

19. [1] கண்ணிமை கைந்நொடி காட்டுமாத்திரையி
லஃகியமவ்வு மாய்தமுங்காலே
உ இக்குறளொற் றய்தமரையே
குறிலே ஐ ஔக்குற ளொற்றள பொன்றே
நெடிலிரண் டுயிரளபொரு மூன்றெனப.

(இ-ள்.) மாத்திரையா மாறுணர்த்துதும்.

கண்ணிமையும் கைந்நொடியும் எழுத்தின் மாத்திரைக் களவாம். இவ்வளவின் நன்மையால், ஆய்தக் குறுக்கமும் மகரக்குறுக்கமும் கான்மாத்திரை.

ஒற்றும், குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் அரைமாத்திரை.

குற்றெழுத்தும் ஐகாரக் குறுக்கமும் ஔகாரக்குறுக்கமும் ஒற்றளபெடையும் ஒரு மாத்திரை. நெட்டெழுத்து இரண்டுமாத்திரை.

உயிரளபெடைமூன்றுமாத்திரை பெறுமெனக்கொள்க

---

[1] பேரகத்தியம், சூத்: 115.

பேரகத். சூத்: 117. "உன்னல்காலே யூன்றலரையே, முறுக்கன் முக்கால் விடுத்த லொன்றே." எ-ம். கூறினர். அன்றியும் செய்யுட்கண் வேண்டுமிடத்து, குற்றியலிகரமும் குற்றியலுகரமும் உயிராகவெண்ணுதிருக்கவும்; ஒற்றளபெடைவேண்டுமிடத்து உயிர்மெய் போல குற்றெழுத்தாக வெண்ணவும்; உயிரளபெடைநெட்டெழுத்தாகவும் குற்றெழுத்தாக வும் எண்ணவும்படும்.

(உ-ம்.) குறள். "குழலினிதியாழினிதென்பர் தம்மக்கண் மழலைச்சொற்கேளாதவர்." இதனுள்இயாழ்என்னுங் குற்றியலிகரம்எண்ணப்படாதென்க. "எஃஃகிலங்கியகையராயின் னுயிர், வெஃஃகுவார்க்கில்லைவீடு." இதனுள் ஈராய்தம்வந்த வொற்றளபெடை எண்ணப் படாதென்க. "கற்றதினுலாயபயனென் கொல்வாலறிவ, னற்ருடொழா அரெனின்." இத னுள் உயிரளபெடை ஈரெழுத்தாக எண்ணப்பட்டதென்க. வேண்டுமிடத்து எண்ணப் படாமையும் பெறும்.

யாப்பருங்கலம்: சூத்: 4. "தளைசீர் வண்ணந்தாங் கெடவரினே, குறுகிய விகரமுங் குற்றியலுகரமு, மளபெடை யாவியு மலகியல்பிலவே." எ-து. மேற்கோள், எ-று. (கசு)

20. முதலீற்றுயிரிரு மொழியே சேர்புளி
இ ஈ ஏ ஐயீறியையும் யவ்வே
மற்றையுயிர்க்கீழ் வகரம்புணரும்.

(எ-து.) (2) புணர் பெழுத்தாமாறுணர்த்துதும்.

உயிரான் முடிந்த சொல்லும் உயிராற்றுவக்கின சொல்லுந் தம்முட் புணருங்கால் அவ்விரண்டுயிர்நடுவே ஓரொற்றிசைத்தல் வேண்டும். இசைப்படு மெழுத்தே புணர் பெழுத் தெனப்படும்.

இ, ஈ, ஏ, ஐ, என்னு நிலைமொழி உயிரீற்றின்முன் வருமொழி பன்னீருயிரும்புண ரில் யகரவுடம்படு மெய்யாம். அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ, என்னு நிலைமொழி உயிரீற் றின்முன் வருமொழி பன்னீருயிரும் புணரில் வகரவுடம்படு மெய்யாம். ஏகாரவீற்றின் முன் பன்னீருயிரும் புணரில் இவ்விருவிதியும் பெறும்.

(உ-ம்.) மணி + அழகு = மணியழகு; தீ + எழுந்தது = தீயெழுந்தது; சே + அழகு = சேய ழகு: கை + அழகு = கையழகு. எ-ம். மர + இலை = மரவிலை; பலா + இலை = பலாவிலை; கடு + இது = கடுவிது; பூ + இதழ் = பூவிதழ்; தே + அடிமை = தேவடிமை; கோ + அழகு = கோவழகு; கௌ + எகினன் = கௌவெகினன். எ-ம். அரசனே + அவன் = அரசனேயவன்; அரசனே + அவன் = அரசனேவவன். எ-ம். வரும்.

நன்: சூத்: 162. "இ ஈ ஐ வழி யவ்வு மேனையுயிர்வழிவவ்வு மேமுனிவ்விருமையு, முயிர்வரினுடம்படு மெய்யென்ருகும்" எ-து. மேற்கோள். எ-று. (கஎ)

இரண்டாவதெழுத்தின் வகுப்பு. — முற்றிற்று.

---

(1) ஏ என்று திருத்தலாயிற்று. ஏ முன்னிருமை. எ ஈற்றில் வராது. சூத்: 52. ஏகாத்திற்கு உதாரணம்.

(2) உடம்படுமெய்யை புணர்பெழுத்தென்ருர். இயல்பு புணர்ச்சி என்பாருமுளர். மயிலைநாதர் சூத்: 161. மெய்யீற்றுடம்படுமெய் என்று கூறுவாருமுளர். விண் + அத்து = விண்வத்து தொல்காப்பியம் - எழுத்து: சூ: 140, ஒப்புநோக்குக.

மூன்றுவதெழுத்தின் விகாரம்

21. திரிபழி வாக்கந்
திரட்டுநால் விகாரம்

(எ-து) விகாரமா மாறுணர்த்துதும்.

பதத்தொடு பதம்புணருங்காற் சந்திகாரணமாகப் பலமுறை நிலைப்பத வீற்றெழுத் தாயினும் வரும்பத முதலெழுத்தாயினும் பலவிடத் தொருப்பட இரண்டும் வேறெழுத் தாகத் திரிதலு முற்றுங் கெடுதலுமாகும். பலமுறை யிருபதநடுவே ஆக்கமாக ஓரேழுத்து மிகலுமாம். இம்மூவிகார மன்றியுஞ் சிலமுறை இருபத மொருபதமாகத் திரண்டு கலப் புழிச் சிலவெழுத்து அவ்வழி விகாரப்படு மெனக்கொள்க.

இவற்றுள், திரிதல் =ஆதேசம், எ-ம். கெடுதல் = உலோபம், எ-ம். மிருதல் =ஆகமம், எ-ம். கலத்தல் =சங்கிரணம், எ-ம். வட மொழியானே வழங்கும்.

தொகைப்படச் சொன்ன இந்நாலெழுத்தின் விகாரம் வகைப்பட விளங்குதற் கல் வழிப் பொருளும் வேற்றுமைப் பொருளும் விளக்கல் வேண்டும், எ-று. (க)

22. அல்வழி வேற்றுமை யாமிரண்டவற்றுள்
விரியினு முருபெடா வினைசார் பெயரே
யல்வழிப் பொருட்பெய ராகுமென்ப
வேற்றுரு பில்லது விரிக்குங் காலை
வேற்றுமைக் கொளினது வேற்றுமைப் பொருளே.

(இ-ள்.) அல்வழியும் வேற்றுமையு மாமாறுணர்த்துதும்.

வினைச்சொற் சார்ந்த முதற்பெயராகி விரியினும் வேற்றுமை உருபுபெறாதுநிற்கும் பெயரே அல்வழிப்பொருட்பெயர், எ-ம். முன்னேவேற்றுமை உருபு கொள்ளாதாயினும் விரிக்குங்காலை வேற்றுமை உருபு கொண்டுவரும் பெயரே வேற்றுமைப்பொருட்பெயர், எ-ம். கொள்க. விதியைவிளக்குதும்.

(உ-ம்) கல்லெடுத்தான், கல்வீடு, கல்லியல்பு என்பவற்று ளுருபுதோன்றாதாயினும் பொருளைவிரித்தாற் கல்லையெடுத்தான், கல்லாலாயவீடு, கல்லினதியல்பென் றவ்வுருபுகூட்ட வேண்டினமையால் இதிலே கல்லென்னுஞ்சொல் வேற்றுமைப் பொருட் பெயரெனப்படும். அவ்வுருபு தோன்றாமலுங் கூட்டாமலும் விரித்துரைக்கப்படும் பெயர் அல்வழிப்பொருட் பெயரெனப்படும்.

(உ-ம்) கல்சிறிது, கல்லுயர்ந்தது. இதிலே கல் என்னுஞ் சொல் அவ்வுருபில்லாமை யானும் பொருளை விரிக்க அவ்வுருபு கூட்ட வேண்டாமையானும் அல்வழிப் பொருட்பெய ரெனப்படும்.

அன்றியும் (உ-ம்.) பொன்னுடையான், என ஐ உருபு தொக்கியும்; பொன்னை யுடையான், என விரிந்தும்; கல்லெறிந்தான், என ஆல் உருபு தொக்கியும்; கல்லா லெறிந் தான், என விரிந்தும்; கொற்றன் மகன் என கு உருபு தொக்கியும், கொற்றற்கு மகன் என விரிந்தும், மலைவீழருவிஎன இன் உருபு தொக்கியும்; மலையின் வீழருவிஎன விரிந்தும்; மலையினுச்சி என அது உருபுதொக்கியும்; மலையினது வுச்சி என விரிந்தும்; மலைமுழை என கண்ணுருபுதொக்கியும் மலைக்கண் முழை என விரிந்தும்; வேற்றுமைப் புணர்ச்சி ஆறும்வந்தன.

அன்றியும், (உ-ம்) கொல்யானை என வினைத்தொகையும், கருங்குதிரை என பண்புத் தொகையும், ஆயன்சாத்தான், சாரைப்பாம்பு என இருபெயரொட்டுப் பண்புத்தொகையும், பொற்சுணங்கு என உவமைத்தொகையும், (1) இராப்பகல் என உம்மைத்தொகையும், பொற்றொடி என அன்மொழித் தொகையும், கொற்றன் கொடுத்தான் என எழுவாய்த் தொடரும், கொற்றுகொள் என விளித்தொடரும், உண்ட சாத்தன் என பெயரெச்சத் தொடரும், உண்டு வந்தான் என வினையெச்சத்தொடரும், (2)குண்டுகட்டெருமை எனக் குறிப்புவினை முற்றுத்தொடரும், உண்டான் சாத்தன் எனத் தெரிநிலைவினை முற்றுத்தொடரும், அதுமற்றம்ம என இடைச்சொற்றொடரும், நனிபேதை என உரிச்சொற்றொடரும், நெருப்பு நெருப்பு என அடுக்குத்தொடருங்கூடிய தொகைநிலை ஐந்தும்; தொகாநிலை ஒன்பதும்; ஆகிய அல்வழிப் புணர்ச்சி பதினான்கும் வந்தன.

இவ்விருவழியிலும், தழாத் தொடருஞ் சிலவுண்டெனக்கொள்க. அவைவருமாறு. கைக்களிறு, எ-து கையையுடையகளிறு, என விரிக்கப்படுதலால் கை எ-து. களிறு என்பதைத் தழுவாமையால் இப்படி வருகின்றவைக ளெல்லாந் தழாத்தொடராகிய வேற்றுமைப் புணர்ச்சியாம்.

சுரையாழ வம்மிமிதப்ப, எ-து. சுரை மிதப்ப, அம்மியாழ எனக்கூட்டப்படுதலால் சுரை எ-து. ஆழ என்பதையும் அம்மி எ-து. மிதப்ப என்பதையுந் தழுவாமையால் இப்படிவருகின்றவைகளெல்லாந் தழாத்தொடராகிய அல்வழிப் புணர்ச்சியாம். (சொல்லில். வேற்றுமை யிலக்கணம் விரித்துக் கூறுதும்.) எ-று. (உ)

23. வலிவரின் மஃகான் வருக்கமாகு
நல்வரின் றனிக்குறின் மவ்வுநவ்வா
மவ்வழியன்றி மகரங் கெடுமே.

(எ-து.) மகரவிகார மாமாறுணர்த்துதும்.

ஈற்றுமகரத்தின்கீழ் க ச த மொழிக்கு முதல்வரின் இவற்றிற்கினவெழுத்தாக மகரந் திரிந்து முறையே ங், ஞ், ந், என அதற்கதற்கு வருக்க வெழுத்து வருமெனக் கொள்க.

(உ-ம்) மனம் + களித்தது = மனங்களித்தது, எ-ம். மனம் + சலித்தது = மனஞ்சலித்தது, எ-ம். மனம் + தளர்ந்தது = மனந்தளர்ந்தது, எ-ம். பிறவு மன்ன. அன்றியும், ஈற்று மகரத்தின்கீழ் நம்முதல் வந்தால் அம்மகரங்கெடும். (உ-ம்.) மனம் + நலம் = மனநலம். எ-ம். முகம் + நிறம் = முகநிறம், எ-ம். பிறவுமன்ன. அன்றியு மகரவீற்றுமொழி தனிக்குறிலாயின் மகரந்திரிந்து நகரமாம். (உ-ம்.) வெம் + நீர் = வெந்நீர், எ-ம். செம் + நெல் = செந்நெல், எ-ம். பிறவுமன்ன. எ-று. (கூ)

24. ண ன முன்தகரம் டற வரமுறையே
ண ன வல்வழிக்கென்று மியல்பாம்
வேற்றுமைப்பொருட்கவை வலிவரின் டறவாம்
ண ன முன்குறில்வழி நகரம் ண ன வா
மற்றது ண ன முன்மாய்ந்து கெடுமே.

(எ-து) ணகார னகாரங்களால் வரும் விகாரமாமாறுணர்த்துதும்.

ஈற்று ணகரத்தின்கீழ் மொழிமுதல்வரும் தகரந்திரிந்து டகரமாகவும், ஈற்று னகரத்தின்கீழ் மொழிமுதல்வரும் தகரந்திரிந்து றகரமாகவும் பெறும்.

---

(1) இராப்பகல் < இரவுபகல், உம்மைத் தொகையில் கசதபமிகாது என்றும் விதி. இரவு பகல் எனும் போதில் ப் மிகாமல் வரும்.

(2) குண்டுகட்டு = கழுத்தையும் காலையுங் கட்டுதல்.

(உ-ம்.) கண் + திறந்தது = கண்டிறந்தது, எ-ம். மின் + தெளிந்தது = மின்றெளிந்தது. எ-ம். பிறவுமன்ன.

அன்றியும், ணனவீற்றுமொழிகள் அல்வழிப் பொருட்புணர்ச்சியில் நகரமொழிந்த எவ்வின வெழுத்துவரினும் திரியாதியல்பாம். (உ-ம்.) மண்கடிது, மண்சிறிது, மண்டீது, மண்பெரிது, மண்ஞான்றது, மண்மாண்டது, மண்யாது, மண்வலிது எ-ம். பொன்கடிது, பொன்சிறிது, பொன்றீது, பொன்பெரிது, பொன்ஞான்றது, பொன்மாண்டது, பொன் யாது, பொன்வலிது எ-ம். வரும்.

ஆயினும் உருபினுற் ரேன்றுமற் பொருளினல் வேற்றுமையினுல் வரும் ஈற்றுணன வின் கீழ் மொழிமுதல் வல்லினம் வரின் ணகரம் டகரமாகவும் னகரம் றகரமாகவுந்திரி யும். (உ-ம்.) மண் + குடம் = மட்குடம். மண் + சாடி = மட்சாடி மண் + தாழி = மட்டாழி, மண் + பானே = மட்பானே, எ-ம். பொன் + குடம் = பொற்குடம், பொன் + சாடி = பொற்சாடி, பொன் + தாழி = பொற்றுழி, பொன் + பானே = பொற்பானே, எ-ம். பிறவுமன்ன.

அன்றியும், ணனவீற்று மொழிகள் தனிக்குறிலாயின் மொழிமுதல் வரும் நகரந் திரிந்து முறையே ணகர னகரமாகும். (உ-ம்) கண் + நெடிது = கண்ணெடிது, எ-ம். மின் + நெடிது = மின்னெடிது, எ-ம். வரும்.

அன்றியும், ணன வீற்று நிலேப்பதங்கள் தனிக்குறி லல்லாதாயின் மொழிமுதல் வரும் நகரங் கெடும். (உ-ம்.) கவண் + நெடிது = கவணெடிது, எ-ம். கலன் + நெடிது = கல னெடிது, எ-ம். தூண் + நெடுமை = தூணெடுமை எ-ம். மான் + நெடுமை = மானெடுமை, எ-ம். பிறவுமன்ன.

நன்: சூத்: 209. "ண ன வல்லினம் வரட்டறவும் பிறவரி னியலபுமாகும் வேற்றுமைக் கல்வழிக் கனேத்து மெய்வரினுமியல்பாகும்மே," எ-து. மேற்கோள். எ-று. (க)

25. தேனெனுமொழிமெய் சேரிருவழியுந்
தானியல்பாமெலிவரின் றன்னீற்றழிவும்
வலிவரினீறுபோய் வலிமெலிமிகலுமா
மின்பின்னுவ்வுறில் வன்மையுமிகுமே
யென்றன்வலிவரி னியல்புந் திரிபுமா
நின்னென்றுமியல்பாய் நிற்குமென்ப
வூன்குயினியல்பா முற்றவேற்றுமைக்கு
மெகின்மரமல்லதே விருவழியியல்பு
மவ்வுறிவலிலரின் வலிமெலிமிகலுமாம்.

(இ-ள்.) முன்சொன்ன விதியிற் சில விகற்பமாமாறுணர்த்துதும்.

தேனெனுமொழி எவ்வகை மெய்வரினும் இயல்பாதலு மெல்லினம்வரின் னகரங் கெடுதலும் வல்லினம்வரின் னகரங்கெட்டு வல்லெழுத்து மெல்லெழுத்து மிகுதலுமாகும் வேற்றுமையிடத்தும் அல்வழியிடத்து மென்ப.

(உ-ம்.) தேன்கடிது, தேன்சுவை, இயல்பாயின. தேன் + குடம் = தேக்குடம், தேன் + கடிது = தேக்கடிது, என இருவழியும் ஈறுகெட்டு வலிமிக்கன. தேன் + முரி = தேமுரி, தேன் + மாண்டது = தேமாண்டது, என இருவழியும் ஈறுகெட்டன.

அன்றியும், மின் பின் என்னும் இருமொழிஈற்றில் வல்லினம்வரின் உகரம் பெற்று வல்லொற்றிரட்டும் வேற்றுமை யிடத்தும் அல்வழியிடத்தும்.

(உ-ம்) மின் + கடிது = மின்னுக்கடிது, பின் + கடிது = பின்னுக்கடிது, எ-ம். மின் + கடுமை = மின்னுக்கடுமை, பின் + கடுமை = பின்னுக்கடுமை, எ-ம். வரும். இவற்றுள் சிறிது-பெரிது-தீது, எ-ம். சிறுமை-பெருமை-தீமை, எ-ம் முறையே கூட்டிக்காண்க.

அன்றியும், தன் என் என்னும் இருமொழி ஈற்றில் வல்லினம்வரின் இயல்புந் திரிபு மாம். நின் என்னும் மொழியீற்றில் வல்லினம்வரின் எப்போதுமியல்பாம்.

(உ-ம்.) தன்பகை-என்பகை என இயல்பாயின. தன் + பகை = தற்பகை, என் + பகை = எற்பகை, என ஈறுதிரிந்தன. நின்பகை, என இயல்பாயின. நிற்பகை, என வாரா.

அன்றியும், ஊன், குயின், என்னும் இருமொழி ஈற்றில் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம்வரின் திரியாதியல்பாம்.

(உ-ம்.) ஊன்கடுமை, ஊன்றீமை, எ-ம். குயின்குழாம், குயின்றிரள், எ-ம். வரும். ((1) குயின் + மேகம்)

அன்றியும், எகின் எ-து. புளியமரமுதற் பன்மரமும், அன்னம், கவரிமா, புள்ளிமான், நீர், நாய், என்றிவையாகும்.

இவற்றுண் மரமல்லாதன எகின் என்னுமொழி இருவழியு மூவினம் வரின் இயல் பாகவும், வல்லினம்வரின் அகரச்சாரியை பெற்று வல்லொற்று மெல்லொற்று மிகவும் பெறும்.

(உ-ம்.) எகின் + கால் = எகின்கால், எ-ம். எகின் + பெரிது = எகின்பெரிது, எ-ம். இரு வழியிலும் இயல்பாயின எகின் + கால் = எகினக்கால், எ-ம் எகின் + கால் = எகினங்கால், எ-ம். எகின் + பெரிது = எகினம்பெரிது, எ-ம் எகின் + பேடை = எகினப்பேடை, எ-ம். இரு வழியிலும் வல்மெலி மிக்கன

எகின் + அழகு = எகினவழகு, எ-ம் எகின் + வலிது = எகினவலிது, எ-ம். மற்றை எழுத்துப்புணர்வழி அகரம்பெற்றவாறு காண்க. பிறவுமன்ன. எ-று. (ரு)

26. லளவேற்றுமையிற் றடவுமல்வழி
யவற்றோடுறழ்வு'ம் வலிவரின்தவ்வரி
னியல்புந்திரிந்தபின் கெடுதலுமாகும்
லளத்தனிக்குறிற்கீ ழல்வழித்தவ்வரின்
றிரிந்தொழிந்தாய்தஞ் சேருமென்ப
லளமுன்மெலிவரி னிருவழினணவா
மவற்றுணத்திரிந் தழிவாந்தனிக்குறி
னண்ணியலளமுன் நவ்வுனணவாம்.

(எ-து.) லகார ளகரங்களின் விகாரமாமாறுணர்த்துதும்.

லளவீற்று நிலைப்பதங்கள் வேற்றுமைப் பொருளாய் வல்லின முதற்பதத்தோடு புண ருங்காலை லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவும் திரியும்.

(உ-ம்.) கல் + புறம் = கற்புறம், நூல் + புறம் = நூற்புறம், விரல் + புறம் = விரற்புறம், சாரல் + புறம் = சாரற்புறம், எ-ம். முள் + புறம் = முட்புறம், வாள் + புறம் = வாட்புறம், புரள் + புறம் = புரட்புறம், எ-ம். திரிந்தன. பிறவுமன்ன.

அல்வழியிடத்தோவெனில், இயல்புந்திரிபுமாம். (உ-ம்.) கல்பெரிது, விரல்சிறிது, வாள்பெரிது, எ-ம். இயல்பாயின. கல் + பெரிது = கற்பெரிது, வாள் + பெரிது = வாட்பெரிது, எ-ம். திரிந்தன. பிறவுமன்ன.

வேற்றுமைப்புணர்ச்சியில் லகார, ளகாரவீற்றில் தவ்வணையின் வருமொழிமுதலும் நிலைமொழியீறுந் திரியும். (உ-ம்.) நூல் + தலை = நூறலை, நூற்றலை; கடல் + திரை = கடறிரை, கடற்றிரை; வாள் + திறல் = வாடிறல், வாட்டிறல்; அவள் + தாய் = அவடாய், அவட்டாய்; எ-ம். இருமொழி திரிந்தன. பிறவுமன்ன.

---

(1) தொல்: எழு. சூ. 335. நச். உரை.

அல்வழிப்புணர்ச்சியில் தனிக்குறிலல்லாத லகர ளகரவீற்றில் தவ்வணையில் இயல்பும் கெடுதலுமாம்.

(உ–ம்.) பொறுத்தல் + தலை = பொறுத்தறலை, அவள் + தந்தாள் = அவடந்தாள், எ–ம். திரிந்தன. பிறவுமன்ன.

அன்றியும், பொறுத்தல்தலை, அவள் தந்தாள், எ–ம். வழக்கிடத்தாகும்.

அல்வழிப் புணர்ச்சியில் தனிக்குறில் லகர ளகரவீற்றில் தவ்வணையின் லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவும், ஆய்தமாகவும்பெறும்.

(உ–ம். கல் + தீது = கற்றீது, கஃறீது; பல் + தொடை = பஃறொடை, அல் + திணை = அஃறிணை, எ–ம். முள் + தீது = முட்டீது, முஃடீது, எ–ம். பிறவுமன்ன. அன்றியும், நிலைமொழி லகரளகரவீற்றில் மெல்லினம்வரின் லகரம் னகரமாகவும், ளகரம் ணகரமாகவும் திரியும் வேற்றுமையிடத்தும் அல்வழி யிடத்தும்.

(உ–ம்.) கல் + மலை = கன்மலை, முள் + முடி = முண்முடி, எ–ம். கல் + முளைத்தது = கன்முளைத்தது, முள் + முரிந்தது = முண்முரிந்தது, எ–ம். இருவழியுந் திரிந்தன. பிறவுமன்ன.

தனிக்குறிலல்லாத லகரளகரவீற்றில் நகரம்வரின் லகர ளகரந்திரிந்து நகரங்கெட்டு னகரணகரமாகும்.

(உ–ம்.) விரல் + நீளம் = விரனீளம், கால் + நீளம் = கானீளம், நூல் + நுனி = நூனுனி, எ–ம். இருள் + நீண்டது = இருணீண்டது, கோள் + நீண்டது = கோணீண்டது, வாள் + நுனி = வாணுனி, எ–ம். பிறவுமன்ன.

இவ்வாறன்றி, தனிக்குறிலணைந்த லகரளகரவீற்றில் நகரம்வரின் லகரளகரந் திரிந்து நகரங்கெட்டு னகர ணகரமாகும்.

(உ-ம்.) கல் + நெஞ்சு = கன்னெஞ்சு, முள் + நிலம் = முண்ணிலம், எ–ம். வரும். எ–று. (சு)

27. சஞயவரின் ஐஅ ச்சமமெனத்திரியும்.

(எ–து.) அகரவைகாரங்களின் விகாரமாமாறுணர்த்துதும்.

மொழிக்கு முதலினும் மொழிக்கு இடையினும் நின்ற அகர ஐகாரங்கள் சஞய வரின் தம்மில்வேறுபாடின்றி ஒன்றற்கொன்றாகத்திரியும்.

(உ–ம்.) பசல், பைசல், மஞ்சு, மைஞ்சு, அய்யர், ஐயர், எ–ம். மொழிமுதல் அகரம், ஐகாரமாகத்திரிந்தது. அரசு, அரைசு; முரஞ்சு, முரைஞ்சு; அரயர், அரையர்; எ-ம். மொழியிடை அகரம் ஐகாரமாகத் திரிந்தது. இவையே மொழிமுதற்போலி, மொழியிடைப்போலி, எ–ம். கூறுவர்.

அன்றியும், ஐந்நூறு, ஐஞ்ஞூறு; மைந்நின்றகண், மைஞ்ஞின்றகண்; நெய்ந்நின்ற விளக்கு, நெய்ஞ்ஞின்றவிளக்கு; எ–ம். வரும். மொழிக்கடைப்போலி.

(உ-ம்.) நலம், நலன்; குலம், குலன்; குளம், குளன்; பழம், பழன்; பயம், பயன்; கடம், கடன்; அகம், அகன்; மனம், மனன்; எ–ம். சுரும்பு, சுரும்பர்; கொம்பு, கொம்பர்: வண்டு, வண்டர்; மாது, மாதர்; சாம்பல், சாம்பர், பந்தல், பந்தர்; அனந்தல், அனந்தர்; குடல், குடர்; அரும்பு, அரும்பர்; எ–ம். வரும்.

நன்.சூத்: 123. "அஐ முதலிடை யொக்குஞ் சஞயமுன்." எ-து. மேற்கோள். எ-று. (எ)

சூத்: 27. இச்சூத்திரப் பொருளைப் பலரும் பலமுறையிற் தருவர். இல. விளக்கம் சூத். 36. புலவர் சேயொளி கழகப் பதிப்பில் விளக்கியுள்ளார்.

28. அடைமொழிஉக்குறள் ஐயாதலுமாம்.

(எ–து.) குற்றியலுகர விகாரமாமாறுணர்துதும்.

குற்றியலுகரவீற்றுச்சிலபதம் அடைமொழியாய் நின்று தொகைப்பொருளாக மற்றொரு பதத்தோடும் பகுபதமாக விகுதியுருபோடும் புணருங்காலை உகரந்திரிந்து ஐயாகவும் பெறும்.

(உ–ம்.) ஆண்டு, ஆண்டை; ஈண்டு, ஈண்டை; யாண்டு, யாண்டை; மற்று, மற்றை; இன்று, இன்றை; அன்றுவாக்கியம், அற்றை வாக்கியம்; பண்டுசெய்தி, பண்டைச்செய்தி; இன்றுநாள், இற்றைநாள்; நேற்றுகூலி, நேற்றைக்கூலி; மூவாண்டுநெல், மூவாட்டைநெல், எ-ம். பிறவுமன்ன. தொகைப்பொருளாக உகரந்திரிந்தவாறு காண்க.

ஈராட்டை யான், பண்டையான், மற்றையவர், என பகுபதமாக உகரந்திரிந்தவாறு காண்க.

அன்றியும், அளவடியான்வரும் கலிவிருந்த (1) மட்டைவிருத்த மென்பார் இன்றைப் புலவருட் சிலர்.

நன். சூத்: 185. "ஐயீற்றுடைக்குற் றுகர முமுளவே." எ-து. மேற்கோள். எ–று.

29. தெவ்வென்பதிருவழி உவ்வெய்திச்சேரும்
வலிமிகுமவ்வரின் வவ்வுமவ்வாமென்ப.

(எ–து.) இனிச் சிலசிறப்பு விதிகளை யுணர்த்துதும்.

தெவ் என்னுமொழி வல்லினத்தோடுபுணரின் உகரமெய்தி வல்லினமிகுதலும், மகரத்தோடு புணரின் வகரங்கெட்டு மகரமிகுதலுமாம்.

(உ–ம்.) தெவ் + கடிது = தெவ்வுக்கடிது, தெவ் + கடுமை = தெவ்வுக்கடுமை, எ–ம். தெவ் + மன்னர் = தெம்மன்னர், தெவ் + முனை = தெம்முனை, எ–ம். வரும்.

தெவ், எ-து. பகை.

நன். சூத்: 236. "தெவ்வென்மொழியே தொழிற்பெயரற்றே. மவ்வரின்வஃ கான் மவ்வுமாகும்." எ–து. மேற்கோள். எ–று. (கூ)

30. யரழமுன்வலிவரினல்வழிக்கியல்பு
மடைமொழிக்காக்கமு மவைவேற்றுமைக்கண்
மிகலுந்தன்னின மெலியெய்தலுமாம்.

(இ–ள்) ய ர ழ என்னு மூன்றொற்றையும் ஈற்றிலேயுடைய நிலைமொழி முன்னே க ச த ப வருமொழிமுதல்வந்து புணர்ந்தால் அவ்வழியில் மிகாமல் இயல்பாம்.

(உ–ம்.) நாய்சிறிது, தேர்சிறிது, வீழ்சிறிது, எ–ம். வரும். அன்றியும், நிலைமொழிப் பதம் தொகைப்பட்டு அடைமொழியாகநின்றால் வருமொழிப்பத முதலில்வல்லினமிகும். (உ–ம்.) பொய் + செல்வம் = பொய்ச்செல்வம், கார் + பருவம் = கார்ப்பருவம், பாழ் + கொல்லை = பாழ்க்கொல்லை, எ–ம். வரும். இவைமூன்றும்பண்புத்தொகை.

அன்றியும், அம்மூன்றொற்றையும் ஈற்றிலேயுடையநிலைமொழிப்பதங்கண்முன் வேற்றுமையில் வல்லினமுதன்மொழிவந்து புணர்ந்தால் வல்லினமிகுதலு மெல்லினமுறழ்தலுமாகும்.

---

(1) மட்டைவிருத்தம்: அளவடியான்வரும் கலிவிருத்தம். சூத்: 248 பார்க்குக மட்டு = மட்டை. மட்டு + விருத்தம் = மட்டை விருத்தம். ஒன்று = ஒற்றை: இரண்டு = இரட்டை: மூன்று = மூற்றை.

(உ-ம்.) வேய் + குறை = வேய்க்குறை, வேர் + குறை = வேர்க்குறை, வீழ் + குறை = வீழ்க்குறை, எ-ம். வேய் + குறை = வேய்ங்குறை, வேர் + குறை = வேர்ங்குறை, வீழ் + குறை = வீழ்ங்குறை, எ-ம். வேற்றுமைவழிக்கண் வல்லின மிக்கலு மெல்லின முறழ்தலுமாயின வாறு காண்க, எ-று. (க0)

31. சிலபலதம்மொடு சேர்புளியியல்பு
முதன்மெய்க்கடைமெய் மிகலுமீறுபோய்
லறவ்வாதலும் லாவாதலுமாம்
பிறவரினகர நிற்றலுங் கெடலுமாம்.

(இ-ன்.) சிலபலவென்னும் இவ்விருசொல்லும் இரட்டித்து வருங்கால் இயல்பாய் நிற்கவு முதலொற்றுயினுங் கடையொற்றுயினு மிக்கு வரவும், அகரங்கெட்டு லகரம் றகர மாகவும் பெறும்.

(உ-ம்.) பலபல, சிலசில, என இயல்பாயின. பலப்பல, சிலச்சில, என ஒற்றுமிக் கன. பற்பல, சிற்சில, என அகரங்கெட்டு லகரம் றகரமாயின.

பல்லபல, சில்ல சில, என லகரமிக்கன. ஒரோவிடத்து ல லாவாகத்திரியும். (உ-ம்.) பலாம், சிலாம். எ-ம்.

அன்றியும், பிறமொழிபுணருங்கால் அகரம் நிற்கவு நீங்கவுமாம். (உ-ம்.) பல்கலை, என அகரநீங்கிற்று. பற்கலை, என அகரநீங்கி லகரம் றகரமாயிற்று.

பலநாள், என அகரநின்றது. பன்னுள், என அகரங்கெட்டு லகரம் னகரமாயிற்று.

பல்மணி, பன்மணி; பலவணி, பல்லணி; பலவாயம், பல்லாயம்; பலவளை, பல்வளை; பல்ஞானம், பன்ஞானம். எ-ம். வரும்.

ஆயினுந் தகரம்வரின் இயல்பாகவும், அகரம்போய் இருபத்தாருஞ் சூத்திரத்தின்படி தனி றவ்வெய்தி ஆய்தம்வரவுமாகும். உ-ம்.) பல் + தொடை = பஃறொடை, பல் + தாழிசை = பஃறாழிசை, எ-ம். பிறவுமன்ன. பல்பல, சில்சில, எ-ம். வரும், எ-று. (கக)

32. ஆமாவல்வழி ஆவீறுமுற்று
மியாவிவைமுன்வலி மிகாதியல்பாகும்.

(இ-ன்.) அல்வழிவந்த ஆமாவென்ற இருபெயரும் மியாவென்ற அசைச்சொல்லும் ஆவீற்ற வெதிர்மறை முற்றுவினையும் எனவிவை வல்லினத்தோடு புணருங்கால் ஒன்றிரட்டா வெனக் கொள்க.

(உ-ம்.) ஆகறந்தன, மாபயந்தன, ஆசிறிய, மாபெரிய, எ-ம். கேண்மியாகோதாய், சொன்மியாபாவாய், எ-ம். தின்னுகுதிரை, கடலோடா கால்வனெடுந்தேர், எ-ம். இவற் றைச் சிறப்பித்து விளக்கினமையால் ஆவீற்றமற்றைப் பெயரும், முற்றுவினையல்லன வினை யும்வரின் வல்லின மிரட்டுமெனக்கொள்க.

(உ-ம்.) புறுப்பறப்பன, கடாப்பெரிய, மிடாச்சிறிய, ஓடாக்குதிரையுமுழாக்காளையு மாகா. ஓடாத உழாத என வரின் வல்லினமிரட்டா.

நன்.சூத்: 171. "அல்வழியாமா மியாமுற்றுமுன்மிகா." எ-து. மேற்கோள். எ-று. (கஉ)

33. தனிக்குறிலீற்றுத் தரும்பெயர்செய்யுட்கே
ஆஅவ்வாதலுமதனோ டுவ்வணையலுமாம்.

(எ-து.) செய்யுளிடத்துத் தனிக்குறிற்கீழே ஆகாரவீற்றுச்சொல்-பெயர் முன்னே பல் பெயர் வருங்கால் அவ்வாகாரங்குறுகி அகரமாகவும், அகரமாயினபின் உகரமிணைந்து வர வும், பெறுமெனக்கொள்க.

(உ-ம்.) சுறமறிவனதுறையெலா நிலவிரிகானல்வாய், எ-ம். நிலவுபாய்ந்த கடலிற் சுறவுபாய்ந்து களித்தன, எ-ம். இருவகை விகாரம் வந்தவாறுகாண்க.

அன்றியும். (உ-ம்.) இரா-இரவு, புரு-புறவு, சுரு-சுறவு, நிலா-நிலவு, விளா-விளவு, பலா-பலவு, என இயல்பாகியுங் குறுகியும் உகரம்பெற்றும் வழக்கிடத்தும் வரும்.

நன். சூத்: 172. "குறியதன்கீழாக்குறுகலு மதனோ, டுகரமேற்றலுமியல்புமாந்தூக் கின்." எ-து. மேற்கோள். எ-று. (கரு)

34. தமிழ்வேற்றுமைக் கச்சாரவும்பெறுமே.

(எ-து.) தமிழ் என்னுஞ்சொல்லே வேற்றுமைப்பொருளாக வருங்கால் அகரச்சாரியை பெற்றும், பெருமையும், வருமெனக்கொள்க.

(உ-ம்.) தமிழ்க்கூற்று, தமிழ்ச்சொல், என அகரச்சாரியை பெருது வந்தன. தமிழப் பல்லவதரையர், தமிழநாகன், தமிழவளவன், தமிழவரசன், என அகரச்சாரியைபெற்று வந்தன.

நன்.சூத்: 225. "தமிழவ்வுறவும் பெறும் வேற்றுமைக்கே." எ-து. மேற்கோள் எ-று. (கச)

35. தனிவழிஐயுந் தனிக்குறில்யவ்வுந் துவ்வுநொவ்வுந் தொடர்மெலிமிகுமே.

(எ-து.) ஓரெழுத்து மொழியாகவரும் ஐகாரமும், தனிக்குற்றெழுத்துக் கூடின யகரமும், ஏவற்சொற்களாகிய, து. நொ, என்றிருமொழிகளும் நிலேப்பதமாகி, வரும்பத முதற்கண் மெல்லினம் புணரின் அல்வழியானும் வேற்றுமையானும் ஒன்றிரட்டும்.

(உ-ம்.) கை + மாறினது = கைம்மாறினது. கை + மாற்று = கைம்மாற்று, கை + ஞான்றது = கைஞ்ஞான்றது, கை + நீண்டது = கைந்நீண்டது.

மெய் + ஞான்றது = மெய்ஞ்ஞான்றது, மெய் + மாண்டது = மெய்ம்மாண்டது, மெய் + நீண்டது = மெய்ந்நீண்டது, என அவ்வழியினும்,

கைஞ்ஞாற்சி, மெய்ந்நீட்சி, மெய்ம்மாட்சி, என வேற்றுமையிலும், ஒற்றுமிக்கன;

துந்நாடா, தும்மாடா, நொந்நாகா, நொம்மங்கா, என ஏவற்சொல்லினு மிக்கன. அன்றியும், துய்யவனு, துவ்வளவா, நொய்யவனு, நொவ்வளவா, எ-ம். வரும் எ-று. (கரு)

36. தனிக்குறின்மெய்யுயிர் சார்புறிமிதும்[1]ரழத் தனிக்குறிற்சாரா தாழுமிகாவென்ப.

(இ-ள்.) தனிக்குறில் நிலேப்பதத்தீற்று ஒற்றெழுத்தெல்லாம் உயிர் தொடர்ந்துவரின் இரட்டும். (உ-ம்.) கண் + அழகு = கண்ணழகு, கம் + அழகு = கம்மழகு, பொன் + அழகு = பொன்னழகு, மெய் + அழகு = மெய்யழகு, கல் + அழகு = கல்லழகு, தெவ் + அழகு = தெவ்வழகு, புள் + அழகு = புள்ளழகு, எ-ம். வரும்.

அன்றியும், ர ழ வென இரண்டொற்றுந் தனிக்குறின் மொழியீற்றின்கண் வரவும் இரட்டவும் பெருதெனக் கொள்க.

சூத்: 34. இக்காலத்தில் அகரம்பெருது வருதல் இயல்பு. இந்நூல்.
சூத்: 370 – "பழையன கழிதலும் புதியன புகுதல் - இந்நூல்.
நன். சூத்: 462. நோக்குக.
இல. விளக்கம் - சூ: 371. புணர்த்தல் ஒப்புதலுக்கில்லே. புணர்தல் நன்று.

(1) தொல்எழு: 49.; பேரகத்: 99.

நன். சூத்: 205. ''தனிக்குறின்முன்ஒற் றுயிர்வரினிரட்டும்.'' எ-து. ''ரழத்தனிக் குறிலணையா.'' எ-து. மேற்கோள். எ-று.
(கசு)

37. மெலிவுறிற்பாவிடை மென்மைவன்மை
குறுமைநீட்சி குறுந்தொகைவிரிவே
மற்றொருமொழிமு வழிகுறைதலுமென
வேண்டுளித்தனிமொழி விகாரமொன்பதே.

(இ-ள்.) சந்திகாரணமாக வரு முன் காட்டிய எழுத்தின் விகாரங்களன்றியே தனித்தொரு மொழியின் வரும் விகாரங்களீண் டுணர்த்துதும்.

அவையொன்பதாம், மெலித்தலும் வலித்தலும் குறுக்கலும் நீட்டலும் தொகுத்தலும் விரித்தலும் அன்றி, ஒருமொழிதானே முதல் இடை கடை என மூவிடத்துக் குறைதலுமாம்.

(உ-ம்.) வாய்ந்தது, எ-து. வாய்த்தது என வலித்தல் விகாரம். தட்டை, எ-து. தண்டை என மெலித்தல் விகாரம். நிழல், எ-து. நீழல் என நீட்டல் விகாரம். பாதம், எ-து. பதம் எனக்குறுக்கல் விகாரம். தண்டுறை, எ-து. (1)தண்ணந்துறை என விரித்தல் விகாரம். வேண்டாதார், எ-து. வேண்டார் எனத் தொகுத்தல் விகாரம்,

அன்றியும், தாமரை, எ-து. மரையிதழ்புரையு மஞ்சுசஞ்சீறடி என மொழிமுதற் குறைந்த விகாரம். யாவர், எ-து. யார் என மொழியிடைக்குறைந்த விகாரம். நீலம், எ-து. நீலுண்டகண், நீனிறப்பகடு என மொழிக்கடைக் குறைந்த விகாரம்.

இவ்வொன்பது விகாரங்களுள் சில சிறு பான்மை யாகையிற் றுனேவழங்காதவற்றை இலக்கியங்களுட் காண்புழி யறிந்துகொள்க. இவை செய்யுள் விகாரம்.

அன்றியும், புணர்ச்சிவிகாரமும், புணர்ச்சியில் விகாரமும் சிலவுள. (உ-ம்.) நிலவலேயம், பொற்குடம், வாழைப்பழம், எ-ம். வரும். இவை புணர்ச்சி விகாரம்.

புணர்ச்சியில்விகாரம் ஏழாகும். முதலாவது தோன்றல். (உ-ம்.) குன்று-குன்றம், செல்-உழி, செல்வுழி, எ-ம். இரண்டாவது, திரிதல்.

(உ-ம்.) மாகி, மாசி, எ-ம். மூன்றாவது, கெடுதல். (உ-ம்.) யார்-ஆர், யாவர்-யார், எ-ம். நான்காவது நீளல். (உ-ம்.) பொழுது-போது, பெயர்-பேர், எ-ம். ஐந்தாவது, நிலைமாறுதல். (உ-ம்.) வைசாகி, வைகாசி, நாளிகேரம், நாரிகேளம், தசை, சதை, ஞிமிறு, மிஞிறு, சிவிறி, விசிறி, எ-ம். ஆறாவது, மருவி வழங்குதல். (உ-ம்.) என்றந்தை, எந்தை, எ-ம். ஏழாவது, ஒத்துநடத்தல். (உ-ம்.) நண்டு, ஞெண்டு, நெண்டு, ஞெண்டு, நமன், ஞமன், எ-ம். வரும். எ-று.
(கஎ)

38. இருமொழி யொருமொழி யெனச்சங்கீர்தமாய்
நிலைமொழியீற்றுயிர் நீங்கலுமதனோ
டணைமொழிமுதற்கண் அ ஆவாதலும்
இ ஈ ஏ யாதலும் உ ஓ வாதலுமாம்.

(எ-து.) ஆதியிற் காட்டிய நால்வகை விகாரங்களுட் டிரட்டெனும் விகாரமா மாறுணர்த்துதும்.

---

(1) யா. காரிகை: குணசாகரர் உரை: 178.

38ம் சூத்: நன்னூற் பதிப்புகளில் வடநூற் சொற்கள் புணருமாறில்லை. சிலர் சேர்த்துள்ளார். நன். சூ: 239 உடன் இணைதல் புறம்பாகவும் பதித்தனர். பருத்தித்துறை வ. குமாரசுவாமிப் புலவர் மற்றவர்கள் உரையில் வேறுபடுகிறார். வடமொழியில் நூலாதாரங் காட்டுகிறார். அவர் பதிப்பில் நோக்குக.

திரட்டெளினுஞ் சங்கீர்தமெனினுமொக்கும். ஆகையி லிருபத மொருபதமாக ஒரோவிடத்து நிலைப்பதவீற் றெழுத்தும் வரும்பத முதலெழுத்தும் ஒன்றாகத் திரண்டு விகற்பமாகும். இது வடமொழிகளின்கண் மிகவழங்கு மென்றுணர்க. ஆகையின் முந்தி நிலைப்பதவீற்றுயிர்கெடும்.

அதுவே கெட்டதன் மெய்ம்மேல் வரும்பதமுதலுயிரேறும். இவ்வாறு வருதல் தீர்க்க சந்தி, குணசந்தி, விருத்திசந்தி எனப்படும். அவை வருமாறு. அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் அவ்விரண்டி லொன்று வந்தால் ஆகாரமும், இகர ஈகாரங்களில் ஒன்றன்முன் அவ்விரண்டில் ஒன்று வந்தால் ஈகாரமும், உகர ஊகாரங்களில் ஒன்றன்முன் அவ்விரண்டி லொன்று வந்தால் ஊகாரமும், முறையே நிலைப்பத வீறும் வரும்பதமுதலும் கெடத் தோன்றுதல் தீர்க்க சந்தியாகும்.

(உ-ம்.) வேத + ஆகமம் = வேதாகமம், குள + ஆம்பல் = குளாம்பல், பஞ்ச + அங்கம் = பஞ்சாங்கம், சிவ + ஆலயம் = சிவாலயம், சரண + அரவிந்தம் = சரணாரவிந்தம், சேநா + அதிபதி = சேநாதிபதி, பாத + அரவிந்தம் = பாதாரவிந்தம். அக + அரி = அகாரி, மர + அடி = மராடி, சுசி + இந்திரம் = சுசீந்திரம், கிரி + ஈசன் = கிரீசன், மகீ + இந்திரன் = மகீந்திரன், மகீ + ஈசன் = மகீசன், குரு + உதயம் = குரூதயம், தரு + ஊனம் = தரூனம், சுயம்பூ + உபதேசம் = சுயம்பூபதேசம், சயம்பூ + ஊர்ச்சிதம் = சுயம்பூர்ச்சிதம், எ-ம். வரும்.

அகர ஆகாரங்களில் ஒன்றன்முன் இகர ஈகாரங்களில் ஒன்று வந்தால் ஏகாரமும், அவ்விரண்டில் ஒன்றன்முன் உகர ஊகாரங்களில் ஒன்று வந்தால் ஓகாரமு முறையே நிலைப்பதவீறும் வரும்பதமுதலுங் கெடத் தோன்றுதல் குணசந்தியாகும்.

(உ-ம்.) சுர + இந்திரன் = சுரேந்திரன், நர + இந்திரன் = நரேந்திரன், தரா + இந்திரன் = தரேந்திரன், சருவ + ஈசுரன் = சருவேசுரன், உமா + ஈசுன் = உமேசன், சித + இந்து = சிதேந்து, அமல + உற்பவி = அமலோற்பவி, மகா + உதரம் = மகோதரம், சுத்த + உதகம் = சுத்தோதகம், ஞான + ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன், மந்திர + ஊகி = மந்திரோகி, தாம + உதரன் = தாமோதரன், தயா + உற்பத்தி = தயோற்பத்தி, தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன், எ-ம். வரும்.

அகர ஆகாரங்களில் ஒன்றன் முன் ஏகர ஐகாரங்களில், ஒன்று வந்தால் ஐகாரமும், அவ்விரண்டில் ஒன்றன்முன் ஓகார ஔகாரங்களில் ஒன்றுவந்தால்ஔகாரமு முறையே நிலைப்பதவீறும் வரும்பத முதலுங்கெடத் தோன்றுதல் விருத்தி சந்தியாகும்.

(உ-ம்) சிவ + ஏகம் = சிவைகம், சிவ + ஐக்கியம் = சிவைக்கியம், தரா + ஏசுவீரன் = தரைகவீரன், ஏக + ஏகன் = ஏகைகன், கலச + ஓதனம் = கலசௌதனம், மகா + ஐசுவரியம் = மகைசவரியம், கோமள + ஓடதி = கொமளௌடதி, திவ்விய + ஔடதம் = திவ்வியௌடதம், மகா + ஓடதி = மகௌடதி, மகா + ஔடதம் = மகௌடதம், எ-ம். வரும்.

ஒரு பதத்துள்ளே முதனின்ற இகர ஈகார ஏகாரங்கள் ஐகாரமாகவும், உதர ஊகார ஓகாரங்கள் ஔகார மாகவும், அகரம் ஆகாரமாகவும், ஏழாமுயிர் ஆர் ஆகவுந் திரிந்து வருதல் (1) ஆதிவிருத்தி சந்தியாகும்.

(உ-ம்.) சிவனைப்பணிவோன்-சைவன், வீரத்தின்றன்மை-வைரம், கேவலத்தன்மை-கைவல்லியம், எ-ம் புத்தனைப்பணிவோன்-பௌத்தன், சூரன்றன்மை-சௌரியம், கோசலன் புத்திரி-கௌசலை, எ-ம். தசரதன் புத்திரன்-தாசரதி, எ-ம். கிருத்திகையின் புத்திரன்-கார்த்திகேயன், எ-ம். வரும்.

(86-ஞ் சூ. காண்க.) இனித்திசைத்தொகையிற் சொல்லுபம்டியே குவ்வீற்றுத் திசைப்பெயர் அஃதொழித்து, குண-குட-வட-தென், என நிற்கும். அவ்வத்திசைக் கண்ணுளது கருதிப் பகுபதமாகச் சொல்லுங்கால் அதுவெனும் விகுதியைக் கூட்டி இவ்விலக் கணத்தாற் குணது-குடாது-வடாது, எ-ம். இவற்றைப்போ லிலக்கணமின்றுயினுந் தெற்குளது-தெனது, எ-ம். வழங்கும். (99-ஞ். சூ. காண்க.) எ-று. (கअ)

---

(1) ஆதி விருத்திசந்தி = தத்திதாந்தம், அகத்தியம் — சூத்: 157, 158, 159, இந்நூல் சூத்: 86. நன்னூல்: 4 பவர். பக். 65.

39. ஈறுபோயிடை யாவேற்றிரட்டிய
சொல்லேமிகுதி தோற்றுமென்ப
விலக்கணமின்றி யியைந்துளபிறவே.

(இ-ள்.) ஒன்றன்மிகுதி காட்ட வதன் பெயரிரட்டி, முதன் மொழி யீற்றெழுற்றுள தெனிற்கெட்டு அதனயல் உயிராகாரமாகத் திரிந்து, வல்லினம்வரினு மிகாமல்வழங்கும்.

(உ-ம்.) பலபலகோடி, (1)கோடாகோடி, பல பலகாலம், காலாகாலம், நீதாநீதி, கோணுகோணம், குலாகுலம் தூராதூரம், தேசாதேசம், கருமாகருமம், எ-ம். பிறவுமன்ன.

இப்பலவிகற்பமன்றியே இலக்கண மில்லாமையும், புலவரால் வழங்கும் விகாரங்களு முளவெனக்கொள்க. அவையே இலக்கணப்போலிமொழி எ-ம். மரூஉமொழி, எ-ம். இனிச் சொல்லும்படி வழங்கும். அவற்றுள், இலக்கணப்போலி வருமாறு.

(உ-ம்.) இல் முன்-முன்றில், வேட்கைநீர்-வேநீர், நகர்ப்புறம்-புறநகர், வேட்கை யவா, வேணவா, கண்மீ-மீகண், கோவில்-கோயில், பொதுவில்-பொதியில், பின்-பின்றை, எ-ம். வரும்.

அன்றியும், மரூஉமொழி வருமாறு.

(உ-ம்.) அருமருந்தன்ன பிள்ளை-அருமந்தபிள்ளை, கிழங்கன்னபழஞ்சோறு-கிழங்கம் பழஞ்சோறு, சோழநாடு-சோணுடு, எவன்-என்-என்ன, பெயர்-பேர், யாடு-ஆடு, சாத்தன் றந்தை-சாத்தந்தை, சென்னைபுரி-சென்னை, புதுவைபுரி-புதுவை, மலையமாநாடு-மலாடு, பாண்டியநாடு-பாண்டிநாடு, தஞ்சாவூர்-தஞ்சை, பனையூர்-பனசை, சேந்தமங்கலம்-சேந்தை, ஆற்றூர்-ஆறை, ஆதன்றந்தை-ஆந்தை, பூதன்றந்தை-பூந்தை, வடுகன்றந்தை-வடுகந்தை, என்றந்தை-எந்தை, உன்றந்தை-உந்தை, முன்றந்தை-முந்தை, யார்-ஆர், யானை-ஆனை, யாறு-ஆறு, மரவடி-மராடி, குளவாம்பல்-குளாம்பல், எ-ம். அ, இ, என்னுஞ் சுட்டுக்கள் அந்த, இந்த, எ-ம். வரும்.

இத்தொடக்கத் தேற்குஞ் செய்கையறிந்து முடிக்கவும். போலிமொழியும் மரூஉ மொழியும் ஒரு மொழியினுந் தொடர்மொழியினும் விகாரப்பட்டு வருவன. (194-ஞ். சூத்திரத்திற் காண்க.) எ-று.

(ககூ)

40. உயிரேகுறினெடி லொற்றுமூவின
முயிர்மெய்யாய்த மோரறுகுறுக்க
மளபெடைமாத்திரைப் புணர்பெனவகுத்து
ணநமனலளதவு நண்ணுந் திரிபல
தேனைதிரியா தியல்பாமென்ன
விவண்விளக்கிய வெழுத்தினியல்பே.

(எ-து.) இவ்வெழுத்ததிகாரத்துள் விளங்கியவற்றை இங்ஙனம் தொகையாகத் தந்த வாறுகாண்க. அன்றியும். (இந்நூற்புணர்ச்சிமுடிவில், நன்னூற்புணர்ச்சி சிலகூறுதும்.)

(1)இயல்பு புணர்ச்சி வருமாறு. (2)(சூத்திரம்) 'பொதுப்பெயருயர்திணைப் பெயர்களீற்று மெய், வலிவரினியல்பாமாவியரமுன், வன்மை மிகாசிலவிகாரமாமுயர்திணை.' (உ-ம்.) சாத் தன் பெரியன், சாத்தன்பெரிது, அவன்பெரியன், அவள்பெரியள், சாந்திபெரியள், சாந்தி பெரிது, தாய்பெரியள், அவர்பெரியர், குமரக்கோட்டம்.

---

(1) கோடநகோடி > கோடாநுகோடி.
(2) இயல்புப் புணர்ச்சி - என்றூர்: நன்னூல்: இராமானுசக் கவிராயர். காக்கைபாடினியர் - மிகாது பக்: 149, 150 – 3ம் 5ம் பதிப்பு.

(சூ.) 'ஈற்றியாவினுவிளிப்பெயர் முன்வலியியல்பே.' (உ-ம்.) நம்பியாகொண்டான், நம்பியோ சென்றுன், நம்பியேதந்தான், யாகுறிது விடலாதா,

(சூ.) செய்யியவென்னும் வினையெச்சம்பல்வகைப், பெயரினெச்ச முற்றுறனுருபே, யஃறிணைப்பன்மை யம்ம முன்னியல்பே.' (உ-ம்.) உண்ணியகொண்டான், உண்டசாத்தன், உண்டுபோனுன், வாழ்ககொற்று, தனகைகள், பலகுதிரைகள், அம்மகொற்று,

(சூ.) 'பவ்வி நீமீமின்னரல்வழி, யியல்பாம்வலிமெலி மிகலு மாமீக்கே.' (உ-ம்.) பீகுறிது, நீகுறியை, மீகண், மீக்கண்.

(சூ.) 'விகாரமனைத்து மேவலதியல்பே.' (உ-ம்.) பொன்மணி, ஒளிமணி.

(சூ.) 'மூன்றுறுருபெண்வினைத்தொகைசுட்டீ, றுகுமுகரமுன்னரியல்பாம்' (உ-ம்.) சாத்தனெடு சென்றுன், சாத்தனதுதலை, ஒருகை, அடுகளிறு, அதுகுறிது.

(சூ.) 'வன்றெடரல்லன முன்மிகாவல்வழி.' (உ-ம்.) நாகுகடிது. எஃகுசிறிது, வரகு தீது, குரங்குபெரிது, தெற்குகொடிது, ஏகுகால்.

(சூ.) 'இடைத்தொடராய்தத் தொடரொற்றிடையின், மிகாகொடி லுயிர்த்தொடர் முன்மிகாவேற்றுமை.' (உ-ம்.) தெள்கின்கடுமை, எஃகின்கடுமை, நாகின்கடுமை, வரகின் கடுமை.

(சூ.) 'இடைச்சொல்லேயோ முன்வரினியல்பே.' (உ-ம்.) அவனேகொண்டான், அவனே கொண்டான்.

(சூ.) 'அல்வழி இஐம்முன்னராயி, னியல்புமிகலும் விகற்பமுமாகும்.' (உ-ம்.) பருத்தி குறிது, யானைகுறிது, கிளிக்குறிது, தினைக்குறிது, சில சூத்திரத்துண் மிக்கதறிக. அன்றியும், விகாரப்புணர்ச்சிவருமாறு.

(சூ.) 'ஒருபுணர்க்கிரண்டுமூன்று முறப்பெறும்.' (உ-ம்.) யானைக்கோடு, நிலப்பனை, பனங்காய்.

(சூ.) 'தோன்றறிரிதல் கெடுதல்விகார, மூன்றுமொழி மூவிடத்துமாகும்.' (உ-ம்.) பூங்கொடி, பஃறலை, நிவவலயம்.

(சூ.) 'மரப்பெயர் முன்னரினமெல்லெழுத்து, வரப்பெறுனவு முளவேற்றுமைவழியே.' (உ-ம்.) விளங்காய், மாங்கொம்பு.

(சூ.) 'சுவைப்புளிமுன்னின, மென்மையுந்தோன்றும்.' (உ-ம்.) புளிங்கறி, புளிஞ் சோறு, புளிந்தயிர், புளிம்பாளிதம்.

(சூ.) 'தெங்குநீண்டீற்றுயிர், மெய்கெடுங்காய்வரின்.' (உ-ம்.) தேங்காய்.

(சூ.) 'சாவவென்மொழியீற்றுயிர் மெய்சாதலும் விதி.' (உ-ம்.) சாக்குத்தினுன்.

(சூ.) 'பூப்பெயர் முன்னினமேன்மையுந்தோன்றும்.' (உ-ம்.) பூங்கொடி, பூஞ்சோலை, பூம்பனை.

(சூ.) 'ஆமுன்பகரவீயனைத்தும்வரக் குறுகுமேலன் வல்வழி யியல்பாகும்மே.' (உ-ம்.) ஆப்பியரிது, ஆப்பிகுளிரும், ஆப்பிநன்று, ஆப்பிவலிது.

(சூ.) 'பனைமுன்கொடிவரின் மிகலும்வலிவரி, னைபோயம்முந்திரள்வரினுறழ்வு, மட்டு றினைகெட்டந்நீள்வுமாம்வேற்றுமை.' (உ-ம்.) பனைக்கொடி, பனந்தூண், பனுட்டு, பனந் திரள்.

(சூ.) 'வேற்றுமையாயினைகானிறுமொழி, யீற்றழிவோடு மம்மேற்பவுமுளவே.' (உ-ம்.) புன்னையங்கானல், வழுதுணங்காய், ஆவிரம்வேர்.

(சூ.) நெடிலோடுயிர்த் தொடர்குற்றுகரங்களுட், டறவொற்றிரட்டும் வேற்றுமை மிகவே.' (உ-ம்.) ஆட்டுக்கால், சோற்றுப்பானை, முயிற்றுக்கால், முருட்டுக்கால், காட் டரண்.

(சூ.) 'ஆவியரழவிறுதிமுன்னிலைவினை, யேவன்முன்வல்லினமியல் பொடுவிகற்பே.' (உ-ம்.) உண்டிசாத்தா, உண்டனைசாத்தா, உண்டரய்சாத்தா, உண்டனீர்சாத்தரே, எறி சாத்தா, விடுசாத்தா, ஆய்சாத்தா, வாழ்சாத்தா, நடக்கொற்று, எய்க்கொற்று.

(சூ.) 'மென்றொடர் மொழியுட் சிலவேற்றுமையிற், றம்மினம்வன்றொட ராகா மன்னே.' (உ-ம்.) மருத்துப்பை, கருப்புவில், கற்று.

(சூ.) 'இயல்பினும்விதியினு நின்றவுயிர் முன் க ச த ப மிகும் விதவாதனமன்னே.' (உ-ம்.) ஆடூஉக்குறியன், தாராக்ககுது, ஒற்றைக்கை, ஆடிக்கொண்டான், பூத்துக்காய்த்தது, பொள்ளெனப்பறந்தது, ஏரிகரை, குழந்தைகை.

(சூ.) 'அகமுனர்ச்செவிகை வரினிடையனகெடும்.' (உ-ம்.) அஞ்செவி, அங்கை.

(சூ.) 'வல்லேதொழிற்பெயரற்றிருவழியும், பலகைநாய்வரினும் வேற்றுமைக்கவ்வுமாம்.' (உ-ம்.) வல்லுக்கடிது, வல்லப்பகை, வல்லநாய்.

(சூ.) 'வவ்விறுசுட்டிற் கற்றுநல்வழியே.' (உ-ம்.) அவற்றை, இவற்றை.

(சூ.) 'சுட்டின்முன் ஞய்தமன்வரிற் கெடுமே.' (உ-ம்.) அதனை.

(சூ.) (1) 'அத்தினகரமகரமுனையில்லை.' (உ-ம்.) மகத்துக்கை, மரத்துக்குறை.

(சூ.) 'நவ்விறுதொழிற்பெயர்க் கவ்வுமாம்வேற்றுமை.' (உ-ம்.) பொருநக்கடுமை.

(சூ.) 'புள்ளும்வள்ளுந் தொழிற்பெயருமானும்.' (உ-ம்.) புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது.

(சூ.) 'இல்லெனின்மைச்சொற்கையடைய, வன்மை விகற்பமுமாகாரத்தொடு, வன்மையாகலுமியல்புமாகும்.' (உ-ம்.) இல்லைப்பொருள், இல்லைபொருள், இல்லாப்பொருள், இல்பொருள்.

(சூ.) 'மீன்றவ்வொடுபொரூஉம் வேற்றுமைவழியே.' (உ-ம்.) மீற்கண்.

(சூ.) 'மவ்வீறொற்றழிந்துயிரீறொப்பவும், வன்மைக்கினமாத்திரிபவுமாகும்.' (உ-ம்.) வட்டவாழி, வட்டக்கடல், வட்டவாரி.

(சூ.) 'ஈமுங்கம்முமுருமுந்தொழிற்பெயர்மானு, முதலனவேற்றுமைக்கவ்வும் பெறுமே.' (உ-ம்.) ஈமுக்கடிது, கம்முக்கடிது, உருமுக்கடிது, ஈமக்குடம், கம்பக்குடம்.

(சூ.) 'வேற்றுமைமப்போய் வலிமெலியுறழ்வு மல்வழியுயிரிடைவரி னியல்பும்முள.' (உ-ம்.) குளக்கரை, குளங்கரை, குளமழகு, குளம்யாது பிறவுமன்ன, சிலசூத்திரத்துண் மிகாதறிக. இவ்விருவகைப்புணர்ச்சி அல்வழிவேற்றுமையில் மெய்ம்முதன்மெய்யீறு, உயிர்முதலுயிரீறு உயிர்முதன் மெய்யீறு, மெய்ம்முதலுயிரீறு, பெயர்முதற்பெயரீறு, வினைமுதல் வினை வீறு, வினைமுதற்பெயரீறு, பெயர்முதல்வினையீறு, பகாப்பதத்தோடு பகாப்பதம், பகுபதத்தோடு பகுபதம், பகாப்பதத்தோடு பகுபதம், பகுபதத்தோடு பகாப்பதம், புணரப்படும்.

(உ-ம்) பொற்குடம், எ-து. மெய்ம்முதன் மெய்யீறாய்ப் பெயர்முதற்பெயரீறாய்ப் பகாப்பதத்தோடு பகாப்பதமாயும்; பொன்னொடிந்தது, எ-து. மெய்ம்முதலுயிரீறாய்ப் பெயர் முதல் வினையீறாய்ப் பகாப்பதத்தோடு பகுபதமாயும்; உண்டோது, எ-து. உயிர் முதலுயிரீறாய் வினைமுதல்வினையீறாய்ப் பகுபதத்தோடு பகாப்பதமாயும்; உண்டவள் செவ்வாய்; எ-து. உயிர்முதன் மெய்யீறாய் வினைமுதற் பெயரீறாய்ப் பகுபதத்தோடு பகுபதமாயும் புணரப்பட்டன. பிறவுமன்ன.

இருமயக்கம்வருமாறு. (சூ.) 'க ச த ப வொழித்தவீரேழன்கூட்ட, மெய்ம் மயக்குடனிலை ரழவொழித்தீரெட், டாகுமிவ்விருபான்மயக்குமொழியிடை, மேவுமுயிர்மெய் மயக்களவின்றே.' (உ-ம்.) சங்கம், வேற்றுநிலைமெய்ம்மயக்கம்; அற்றம், உடனிலைமெய்ம்மயக்கம். பிறவுமன்ன. (நன்னூலிற்காண்கவென்ற பிறப்புவருமாறு.)

(சூ.) "அவ்வழி ஆவியிடமையிடமிடறுகு, மேவுமென்மை மூக்குரம்பெறும் வன்மை

கொழும்பு தமிழ்ச் சங்

(1) தொல்காப்பியச் சூத்திரம் நன்னூலில். தொல்: எழு: புணர். 23, நன்: சூத். 252.

அவற்றுள், முயற்சியுள் அ ஆ வங்காப்புடைய; இ, ஈ, எ, ஏ, ஐ, அங்காப்போ டண்பன் முதனுவிளிம்புற வருமே; உ, ஊ, ஒ, ஓ, ஔ, விதழ்குவிவே; கஙவுஞ் சஞவும், டணவுமுதலிடை, நுனிநாவண்ண முறமுறைவருமே; அண்பல்லடி நாமுடியுறத்தந வரும்: ம் கீழிதழுறப்பம்மப்பிறக்கும்; அடிநாவடிவணமுற யத்தோன்றும்; அண்ணநுனி நாவருடரழ வரும்; அண்பன் முதலுமண்ணமு முறையினு விளிம்புவீங்கி, யொற்றவும்வருடவும் லகா ரளகாரமாயிரண்டும்பிறக்கும்; மேற்பல்லிதழுறமேவிடும்வவ்வே, அண்ணநுனிநாகனியுறிற்றன வரும். "ஆய்தக்கிடந்தலையங்காமுயற்சி சார்பெழுத்தேனவுந்தம்முதலனைய." (3-ஞ். சூத்திரத்திற்கூறிய பிறப்பு இவையேகாண்க.) எ–று. (உ0)

மூன்றுவதெழுத்தின்விகாரம். — முற்றிற்று.

அதிகாரம் ஒன்றற்கு, இயன்மூன்றற்கு தற்சிறப்புப்பாயிரமுட்பட, ஹு (சூ.) [1]40.
மேற்கோள் (சூ.) 80. ஹு மொத்தம் (சூ.) 120.

முதலாவது:— எழுத்ததிகாரம். — முற்றிற்று.

---

[1]எல்லாப்பதிப்புகளிலும் 41 சூத்திரங்கள் உண்டு. 40 சூத்திரங்களாகத் திருத்தப்படல் வேண்டும். தற்சிறப்புப்பாயிரம் வீரமாமுனிவர் செய்தது.

ST. JOSEPH'S CATHOLIC PRESS,
BATTICALOA.